Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline 0212229497
(C/2483)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 07 சனிக்கிழமை (20.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 202
















# காங்கேசன் துறைமுகம் புனரமைப்பு இந்திய உதவியுடன் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


காங்கேசன்துறை துறைமுகம் ஆழமாக்கும் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆழமாக்கும் பணியை மேற்கொள்வதற்கு இந்தியாவில் இருந்து கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்தடைந்துள்ளதாக யாழ். இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப்பணி இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரை துறைமுகப் பகுதியில் மூழ்கியிருந்த கடற்கலங்களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.


பெரிய கப்பல்களை உள்வாங்கும் நோக்கில் துறைமுகத்தினை 8 அடி ஆழமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை மேற்கொள்வதற்காக நேற்று மாலை 2.00 மணிக்கு இந்தியாவில் இருந்து கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்து வரும் 15 நாட்கள் இந்த ஆழமாக்கும் பணி நடைபெறவுள்ளதாகவும் இந்திய் துணைத்தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆழமாக்கும் பணியை இந்திய தூதரக அதிகாரிகள், கடற்படையினர் உத்தியோக பூர்வமாக நேற்று ஆரம்பித்து வைத்தனர். (02)



## இரகசியங்களை விற்பனை செய்தாரா? சுரேஷ் எம்.பி.மீது விசாரணை



(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புடன் தொடர்பான பெறுமதிமிக்க இரகசியமான விடயங்களை வெளிநாட்டு ஊடகங்களுக்கு வழங்கிய குற்றத்துக்காக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடமே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று இவ்விடயம் குறித்து விசாரணை நடத்தியுள்ளனர். காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை கொழும்பில் உள்ள புலனாய்வுத்திணைக்களத்தில் இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கி இளைஞர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில் இடம்பெற்ற மின்சாரத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வேலணை மேற்கு வேலணையைச் சேர்ந்த செல்வராசா அஜந்தன் (வயது-31) என்ற இளைஞனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அண்மையில் இவர் மத்திய கிழக்கு நாடொன்றில் பணி புரிந்து விட்டு வந்து வேலணை வங்களாவடி பகுதியில் வெல்டிங் ஒட்டுத் தொழிற்சாலை ஒன்றை நடாத்திவந்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கனிஷ்ட மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம்

### 2015 இல் அமுலாகும்

தரம் - 6 முதல் 10 வரையிலான பாடத்திட்டத்தை 2015 ஆம் ஆண்டு முதல் மாற்றம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எட்டாம் தரத்திற்கு பின்னர் மேற்கொள்கின்ற பாடத்திட்ட திருத்தத்திற்கு புதிதாக 70 - 75 வரையிலான புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் மீண்டும் விளக்கமறியலில்

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட 26 இந்திய மீனவர்களையும் எதிர் வரும் 26 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மகேந்திரராசா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் 26 பேரை கரையோர பாதுகாப்புப் படையினர் மற்றும் கடற்படையினர் கைது செய்து நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களத்திடம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ‘உதயன்’ மீதான தாக்குதல் மும்முனையில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

‘உதயன்’ பத்திரிகை காரியாலயத்தின் அச்சகப்பகுதி மீது இனம் தெரியாதவர்கள் நடத்திய தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திலகரட்ண தலைமையில் மூன்று பொலிஸ் குழுக்கள் மேற்கொண்டு வருவதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இந்தப் பொலிஸ் குழுக்கள் சம்பவதினம் அந்த நிறுவனத்தில் பணியாற்றிய பணியாளர்களிடம் இருந்தும் அயலில் உள்ளவர்களிடம் இருந்தும் வாக்கு மூலங்களைப் பதிவு செய்திருப்பதாகவும் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்த விசாரணைகள் முடியும் வரை 24 மணி நேரமும் பொலிஸ் காவல் அந்த நிறுவனத்திற்குப் போடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் தாக்குதலுக்குள்ளான பகுதியில் மோப்பநாய்களின் உதவியுடனும் கைரேகை நிபுணர்களின் உதவியுடனும் பரிசோதனை நடத்தப்பட்டதாகவும்,

மேலும் அந்த அச்சகப் பகுதியில் இருந்து தடயப் பொருட்களாக ரவை

(19) ஆம் பக்கம் பார்க்க



# கல்வித் தரத்தின் வளர்ச்சி யாழ். வலயத்தில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். கல்வி வலயத்தில் கல்வித் தரத்தின் வளர்ச்சி அதிகரித்திருக்கின்றது.


நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேசமட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் யாழ். கல்வித் திணைக்கள அதிகாரியினால் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கணித பாடத்தின் வளர்ச்சி 69 வீதத்திலிருந்து 73 வீதமாகவும், தமிழ் 86 வீதத்திலிருந்து 88 வீதமாகவும், விஞ்ஞானம் 69 வீதத்திலிருந்து 75 வீதமாகவும் ஆங்கிலம் 47 வீதத்திலிருந்து 58 வீதமாகவும் வரலாறு 72 வீதத்திலிருந்து 75 வீதமாகவும் கல்வித்தரம் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெறாதவர்கள் இல்லை என்றும், கோப்பாய் கல்வி வலயப் பாடசாலைகளில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாதவர்கள் உள்ளதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேட்ட கேள்விக்கு அந்த அதிகாரி பதிலளித்தார். (இ,பா)

# வெளியிணைப்பு இயந்திரம் களவு; முல்லைத்தீவில் இருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில் படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் வெளியிணைப்பு இயந்திரம் களவு சம்பந்தமாக இருவரை முல்லைத்தீவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.




கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் உரும்பிராயைச் சேர்ந்தவர் மற்றையவர் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான இந்த வெளியிணைப்பு இயந்திரத்தைக் களவாடிய இருவரும் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மந்திகைப் பிரதேசம், புலோலி, சாரையடி, ஓராம்கட்டை, தம்பசிட்டி, பருத்தித்துறைப் பிரதேசம், அல்வாய்ப் பிரதேசம், நெல்லியடிப் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், கரணவாய்ப பிரதேசம், குஞ்சர் கடைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், மருதனார்மடம், உரும்பிராய், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், குப்பிளான், மல்லாகம், ஏழாலை, மயிலஙகாடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கட்டைப்பிராய், கல்வியன்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி, ஆகிய இடங்களிலும்,

22.04.2013 திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் அண்ணாசிலையடி முதல் கரணவாய் வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின்சாரசபை அறிவித்துள்ளது.

# நகரசபைக்கு வழங்கப்பட்ட பொருட்கள் எவரும் அறியாதவகையில் விற்பனை

வவுனியா நகரசபைக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட பாவிக்கப்பட்ட பொருட்கள் வழங்கப்பட்ட நிலையில் அவற்றை எவரும் அறியாத வகையில் நகரசபை அதிகாரிகள் விற்பனை செய்து விட்டதாக தெரிவித்து வடமாகாண ஆளுநர் உட்பட அதிகாரிகளுக்கு வவுனியா நகரசபையின் முகாமைத்துவ உதவியாளர், முறைப்பாட்டு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். இக் கடிதத்தில் மேலும் குறிபபிடப்பட்டுள்ளதாவது,

2011 ஆம் ஆண்டு யூலை மாதம் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத்திட்டத்தினால் தாம் பயன்படுத்திய பொருட்கள் பலவற்றை வவுனியா நகரசபைக்கு கையளித்திருந்தனர். எனினும் இப் பொருட்கள் நகரசபையில் எவரும் அறியாத வகையில் நகரசபை உயரதிகாரிகள் இருவர் தனியார் ஒருவருக்கு விற்பனை செய்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் வவுனியா நகரசபையின் செயலாளரை 9.4.2013 அன்று இப்பொருட்கள் நகரசபைக்கு வரவில்லை எனவும் கணக்காய்வில் தெரிவிக்கப்படவில்லை எனவும் முகாமைத்துவ உதவியாளராகிய தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நகரசபையின் தலைவருக்கு இவ்விடயம் தொடர்பில் கடந்த 10 ஆம் திகதி அன்று முறையிட்டபோதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா நகரசபை தலைவருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரதியும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் பொருட்களின் விபரங்களின் பிரதியும் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா நகரசபையின் தலைவரிடம் கேட்டபோது, தன்னிடம் உலக உணவுத்திட்டத்தினால் பொருட்கள் அடங்கிய பட்டியல் வழங்கப்பட்டதாகவும் தான் அதனைப் பார்வையிட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவித்ததுடன் இது தொடர்பில் தான் அன்றைய தினமே செயலாளரிடமும் தெரிவித்ததாகவும் கூறினார்.

இதேவேளை இவ் விடயத்தில தான் எந்தவகையிலும் தொடர்புபடவில்லை என தெரிவித்த அவர் இவ்விடயம் தொடர்பில் தான் தமது உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் மேலதிக கருத்தை தெரிவிக்க முடியும் எனவும் கூறினார்.





ஊர்காவற்றுறை பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட வியாபாரநிலைய உரிமையாளர்களுடனான சுகாதார நடைமுறைகள் மற்றும் வியாபார உரிமம் தொடர்பான கலந்துரையாடலில் பிரதேசசபையின் துணைத்தவிசாளர் ம.பெ.அல்பேட் கருத்துரையாற்றுவதையும், கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டமும், அங்கத்தவர் தெரிவும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி எஸ்.கே. நடராஜா தலைமையில் நடைபெறும். (104)

# ஆறுமாதக் குழந்தை சளி அடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

சளி அடைப்பால் 6 மாதக் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று மாதகல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சகாயபுரம் மாதகலைச் சேர்ந்த நிமலதாஸ் றிசானா என்ற பச்சிளம் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் சளி மற்றும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட பிரஸ்தாப குழந்தைக்குத் தாயார் தனியார் மருத்துவமனையில் மருந்து எடுத்துக்கொடுத்துள்ளார். எனினும் இரவு வேளை சளி அடைப்புக்குள்ளாகி தவித்த குழந்தையை நேற்று அதிகாலை 6 மணியளவில் பஸ்வண்டி மூலம யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவந்துள்ளார். அங்கு வெளிநோயாளர் பகுதியில் வைத்தியர் பரிசோதிக்க முறபட்டபோது குழந்தை மூச்சுத்திணறி இறந்த நிலையில் காணப்பட்டதாகப் பொலிஸ் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இக்குழந்தையின் மரணம் குறித்து மரணவிசாரணை நேற்று மாலை இடம்பெற்றதுடன் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (இ)

# முல்லைத்தீவில் நாளை மாபெரும் விளையாட்டுப் போட்டி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொலிஸாரும் சிவில் பாதுகாப்புக் குழுவும் இணைந்து முல்லை வர்த்தக சங்கம் மற்றும் முல்லை நகர நலன் விரும்பிகள் ஆகியோரின் உதவியுடன் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்ட மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு நகர் பொது விளையாட்டு மைதானத்தில் இவ் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளதுடன் முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய 4 பொலிஸ் பிரிவுகள் ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்விளையாட்டு விழாவில் ஆண், பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், கயிறிழுத்தல் போன்ற விளையாட்டுக்களும் மற்றும் சிறுவர் விளையாட்டுக்களும் பாரம்பரிய விளையாட்டுக்களும் நடைபெறவுள்ளன.


இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. (04)

# பெண்கள் கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கு இடையில் நடாத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மாவட்ட மட்டப் போட்டிகள் இன்று காலை 9.00 மணி தொடக்கம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இதில் வலய ரீதியாக நடாத்தப்பட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை அணி பங்குபற்றுகினறமை குறிப்பிடத்தக்கது. (118)



யாழ்.சிறைச்சாலைக்கான கட்டடம் பண்ணைப்பகுதியில் அமைக்கப்பட்டுவருகின்றது. இதன் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு அமைக்கப்படும் புதிய கட்டடத்தை இங்கு காணலாம். (படம். ஆர்.இராஜகுமார்)

# கிராமப்புற வீரர்களே தேசிய ரீதியிலும் சாதனை

## – யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(வடமராட்சி)

கல்வி, விளையாட்டு மட்டுமல்லாது எந்தவொரு துறையிலும் சாதனை நிகழ்த்த வேண்டும். கிராமப்புறங்களில் மற்றும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ளவர்களே. இதில் முன்நிற்பதுடன் அவர்களின் வெற்றி ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக உள்ளது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை மருதங்கேணி பொது மைதானத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் இது தொடர்பாக மேலும் உரையாற்றுகையில்,

இங்கு நடைபெற்ற போட்டிகளில் ஆண்களும், பெண்களும் தமது உள்ளார்ந்த திறமையை வெளிக்காட்டியுள்ளனர். இது பாராட்டத்தக்கதாகும்.

மேலும் நான் பல மாவட்டங்களில் கடமையாற்றியிருக்கின்றேன். அங்கு பிரதேச செயலக ரீதியாக விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. எனினும் இப்பிரதேசத்தில் இடம்பெற்ற போட்டிகள் முதன்மை பெற்றுள்ளன.

இவ்வீர வீராங்கனைகள் உண்மையில் விளையாட்டு வீரர்களாக உருவாகுவது கிராமப் புறங்களை அண்டிய பகுதிகளிலேயே என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளார்கள்.

எமது நாட்டில் தேசிய வீரர்களின் பட்டியலில் எந்த விளையாட்டுக்களை எடுத்துக் கொண்டாலும் முதன்மை பெற்ற வீரர்களாக தேசிய ரீதியில் சாதித்துக்கொண்டிருப்பவர்கள்



கிராமங்களில் வசிப்பவர்கள் தான்.

இந்த வருடம் பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகள் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அடுத்தவருடம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மாவட்ட மட்டப் போட்டிகளை நடாத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (116)

# வெல்லன்வெளி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மத்தி வெல்லன்வெளி கிராய் விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

இதில் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 25 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், மாலை கொடியிறக்கமும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை வைரவர் உற்சவமும் இடம்பெறவுள்ளது.

# காப்பெற் வீதிகளில் எரியூட்ட வேண்டாம்

## – வர்த்தகர்களுக்கு அறிவுறுத்து

(திருநெல்வேலி)

காப்பெற் வீதிகளில் வர்த்தகர்கள் கண் திருஷ்டிக்கான பொருட்களை வைத்து எரியூட்ட வேண்டாம் என யாழ்.வணிகர் கழகம் தனது வர்த்தகர்களைக் கேட்டுட்டுள்ளது.

கண் திருஷ்டிக்காகக் குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் வர்த்தகர்கள் கற்பூரம், செத்தல் மிளகாய், உப்பு, மிளகு போன்ற சில பொருட்களைத் தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வைத்து எரிப்பது வழமையாகும்.

இச்செயற்பாட்டினால் காபபெற் வீதிகள் சேதமடைவதுடன், சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது. மேலும் சில வேளைகளில் தீ விபத்துக்களும் ஏற்படும் அபாயம் ஏற்படுவதாகவும், இதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்.மாநகரசபை அண்மையில் அறிவித்திருந்தது.

இதனையடுத்து வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் ஒன்றைத் துண்டுப் பிரசுரம் மூலம் விடுத்துள்ளது.

கண் திருஷ்டிப் பொருட்களை எரிப்பதற்கு உலோகத்தட்டு அல்லது உலோகப் பெட்டியொன்றைப்பயன்படுத்துமாறும், எரிக்கப்பட்டபின் தகட்டையோ, பெட்டியையோ உடன் அப்புறப்படுத்திக்கொள்ளுமாறும அத்துண்டுப்பிரசுரத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (137)

# நோயாளர்கள் விசனம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் நண்பகலுக்குப் பின்னர் சிகிச்சையைப் பெறுவதில் தாம் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்ளுக்கான நாளாந்த சிகிச்சைக்காக ஒப்பந்த அடிப்படையில், வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவரே சகல நோயாளர்களையும் பார்வையிட்டு சிகிச்சை வழங்குவதுடன், நண்பகலுக்குப் பின்னர் ஓய்வில் சென்று குறிப்பிட்ட நேர்ததிற்குப் பின்னரே வருவதால் அதுவரை நோயாளர்கள் காத்திருக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.


இது தொடர்பாக வைத்தியசாலை நலன்புரி நிலையத்தில் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத்தெரிவிக்கும் நோயாளர்கள் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றனர்.(15)

# பனை மரத்திற்கு கிராக்கி

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் தற்போது என்றுமில்லாத அளவிற்கு பனைமரத்திற்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

பனை மரம் தறிப்பதற்கு 'பாஸ்' நடைமுறை அமுலில் உள்ளதால் நடைமுறையினைக் கடைப்பிடிக்காமல் திருட்டுத்தனமாக பனை அழிக்கப்பட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் தற்போது ஒரு பனை சராசரியாக 6 ஆயிரம் ரூபா முதல் 8 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (150)



யாழ்.பண்ணைப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள அரச ஊழியர்களுக்கான வாடி வீட்டு கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் அண்மையில் நாட்டப்பட்டது. பண்ணை முத்தமிழ் சதுக்கப் பகுதியில் இதற்கான ஆரம்பப் பணிகள் இடம்பெறுகின்றன. பக்கோ வாகனத்தின் மூலம் மண் அகழும் பணிகள் நடைபெறுவதைக் காணலாம். (படம்: ஆர்.இராஜகுமார்)

# கவனிப்பாரற்ற இந்துமயானம்; சிரமப்படும் சந்திரபுரம் மக்கள்

(கல்வயல்)

சாவகச்சேரி சந்திரபுரம் சிவன் கோயிலை அண்மித்த பகுதியில் உள்ள கொட்டடி தூவு இந்துமயானம் கவனிப்பாரற்ற நிலையில் அழிவடைந்துகொண்டே செல்வதாக இப்பிரதேச மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் அண்ணளவாக 500 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இம்மக்களுக்கு இந்த இந்துமயானத்தைப் பயன்படுத்துவது இலகுவானதாகும். ஆனால் இம்மயானம் நீண்டகாலமாக எவ்வித புனரமைப்புக்கும் உட்படாமல் பற்றைக்காடாகக் காணப்படுவதாகவும், இங்கு சில விஷமிகள் களவாக மண் அகழ்வில் ஈடுபடுவதாகவும், இதனால் இம்மயானம் பயன்படுத்தமுடியாமல் அழிந்து செல்வதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இப்பகுதி மக்கள் தமது உறவினரது உடல்களை தகனம் செய்வதற்கு இப்பிரசேதத்தில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வண்ணாத்தியாம்பாலம் புத்தூர் பகுதியிலுள்ள மயானத்திற்கும், அல்லது சந்திரபுரத்திலிருந்து இரண்டரைக். கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நெணியன் இந்து மயானத்திற்கும் செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கினறனர்.

மயானத்திற்குச் . செல்லும் வீதியும், மிகமோசமாக சேதமடைந்துள்ளது. இவ்வீதியும் பயன்படுத்தமுடியாத நிலையில் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இம்மயானம் மற்றும் வீதியை மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (43)

# ஆசிரியர்களின் நலன் கருதி விடுதி அமைக்கக்கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலையில் ஆசிரியர்களுக்கென விடுதிகள் இன்மையால் தூர இடங்களில் இருந்து வரும் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 11 வரை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற இந்நிலையில் இப்பாடசாலைக்கு நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களில் தூர இடங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் இருந்து வரும் ஆசிரியர்கள் தங்கிநின்று கற்பிக்க முடியாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதைவிட இவ்வாறு தூர இடங்களில் இருந்துவரும் ஆசிரியர்கள் நேரம் தாமதமாக வருவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிப்படைவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பாடசாலையில் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளும் ஆசியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்களுக்கான விடுதி ஒன்றை அமைக்க நட வடிக்கை எடுக்கவேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

நீ வெற்றி பெற்றால், நீ பிறருக்கு நின்றுகொண்டு விளக்கத் தேவையில்லை. நீ தோற்றால் நீ அங்கு நின்று உன் தோல்விற்கான காரணங்களை விளக்கிக் கொண்டிருக்கக் கூடாது. - அடால்.்.ப் ஹிட்லர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இருக்கும் இடத்தை விட்டு...

நம்மெல்லோருக்கும் ஊடகங்களைப் புறக்கணித்துவிட்டு வாழ்வது என்பது இனி சாத்தியமாகுமா என்று தெரியவில்லை. காலை எழுந்து நம் ஊடகங்களில் விழித்தாலோ, குற்றச்சாட்டுகளும் வெறும் எதிர்ப்பு முழக்கங்களும்தான் தமிழ்வாழ்க்கை என்ற விரக்திக்குள் மீண்டும் மீண்டும் வீழும்படியாகவே இருக்கிறது.

வன்மக்குழிக்குள் வலிந்து விழுத்தப்பட்டு வாழ்க்கையைத் தொலைக்கும் மனிதர்கள் நாம் என்ற சுயபரிதாபமே எஞ்சுகிறது. இந்த ஊடகங்கள் திணிக்கும் வெறுப்பும் எதிர்ப்புமான மனநிலைக்கு மக்கள் எளிதில் ஆட்படக் காரணம் என்னவாக இருக்க முடியும்? அறிவார்ந்த தெளிவின் அடிப்படையில் எதையும் சிந்திக்க விரும்பாமல், எளிதில் மனதை வசப்படுத்திவிடும் உணர்ச்சிகரமான ஆவேசங்களிலேயே போய் விழுவது பலருக்கும் சுலபமாக இருப்பதுதான்.

நாம் மற்றவர்களிலிருந்து தனியானவர்கள்; மற்ற எவருக்கும் மேலே நின்று பேரம் பேசுவதற்கான வல்லமைகளை என்றோ ஒருநாள் அடைந்துவிடுவதற்காகக் காத்திருப்போமே தவிர, யதார்த்தம் உணர்ந்து விட்டுக்கொடுக்க மாட்டோம்; முற்றிலும் திருப்திகரமான நம் கனவான அந்த முழுமை நிலையை அடைவதல்லால், பகுதி தேவைகளை நிறைவேற்றி அதிலிருந்து மேல்நகரும் சமரசங்களுக்கு இணங்க மாட்டோம்.

இப்படி ஒரு செம்மை மாந்தர் கனவுநிலையிலேயே நடப்பு வாழ்வை முழுமக்களுக்கும் பாழாக்கிக் கொண்டிருக்கிறோம். செம்மையாய் முழுமையாய் எதுவும் கிடைக்க வேண்டும்–நடைபெற வேண்டும் என்று காத்திருத்தலானது கனவுநிலையே தவிர நடைமுறை விவேகம் அல்ல. எதுவும் முழுச் சரியாக முழுத் திருப்தியுடன் யாருக்கும் கிடைப்பதில்லை. மனிதர்கள் யாரும் முழுச் சரியானவர்களாக இருப்பதுமில்லை.

“செம்மைக்கு எல்லை இல்லை. செம்மை என்பது இதுதான் – இருக்க வேண்டிய இடத்தில் சரியாக இருப்பது” என்கிறார் Richard Bach. ஒரு விஷயத்தில் செம்மை என்பது அவ்விஷயத்தின் ஒவ்வொன்றும் அதனதன் சரியான இடத்தில் இருப்பது. சரியான இடம் என்பது என்ன? இது ஒரு சார்பான விஷயமாதலால் செம்மை ஆளாளுக்கு, ஒவ்வொரு காலத்துக்கு, ஒவ்வொரு இடத்துக்கு மாறுபடவே செய்யும்.

ஆகவேதான் நடைமுறையில் சாத்தியமாகக் கூடிய நிலைமைக்கேற்ப நம் விருப்பங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டும். யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொள்ளாமல் தங்கள் ஒரே விருப்பமாக பட்டுவேட்டிக் கனவையே வைத்திருப்பவர்கள் கட்டியிருந்த கோவணத்தையும் காணமலாக்கிவிட்டுத் தவிப்பது காலகாலமாக நாம் பார்த்துவரும் வரலாற்றனுபவம்.

ஒரு விஷயம் ஒருவருக்கு செம்மை என்று தெரியலாம். இன்னொருவருக்கு அது பற்றி அத்தகைய அபிப்பிராயம் இராமல் போகலாம். இது முழுக்க முழுக்க முன் முடிவுகளால், பாரபட்சத்தால், விருப்பு வெறுப்புகளால் அவரவரது வாழ்நிலைத் தரத்திலிருந்து தோன்றுவதுதான்.

மர்லின் மன்றோ, இளவரசி டயானா, க்ரேஸ் கெல்லி, ஏஞ்சலீனா ஜோலீ போன்றவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு சமீபத்திய தொலைக்காட்சி கருத்துக்கணிப்புகளில் கடந்த நூறு ஆண்டுகளில் மிக அழகானவராக ‘செம்மை அழகு’ என்று பெண்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒட்ரி ஹெப்பேர்ன் சொல்கிறார்:

“ஒட்ரி ஹெப்பேர்னுக்கு வியர்ப்பதில்லை, விக்கலோ தும்மலோ வருவதில்லை என்று நினைக்கும் ஆட்களிடம் ஏதோ சரியில்லை என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் அவர்களுக்குத் தெரியும் அது உண்மையில்லை என்று. உண்மையில், சொல்லப் போனால் நிறையப் பேரை விட எனக்கு அதிகம் விக்கல் வரும்.”

முழுவதும் சரியான ஒன்று கிடைப்பதற்காக ஏங்கிக்கொண்டிருப்பதை விட, கிடைப்பதை எடுத்துக்கொண்டு சரியானதை நோக்கி நகர்வதே விவேகமானது. - ஆசிரியர்

# பொதுநலவாய உறுப்புரிமை
# இலங்கை நீக்கப்படும் அபாயம்
## எச்சரிக்கும் ஐ.தே.க.

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் உறுப்பு நாடு என்ற தகுதியை இலங்கை இழக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. பொதுநலவாய நாடுகளின் வழக்கறிஞர்கள் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம் இந்த ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் வழக்கறிஞர்கள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். பொதுநலவாய நாடுகளின் அடிப்படைத் தன்மையினை இலங்கை மீறியுள்ளதாகத் தெரிவித்தே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகள் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்படக் கூடிய அச்சுறுத்தல் எதுவும் இதுவரையில் ஏற்படவில்லை என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

# கடல் உணவுகளின் விலைகள்
# நாச்சிக்குடாவில் வீழ்ச்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நாச்சிக்குடாப் பகுதியில் கடல் உணவுகளின் விலைகள் குறைவடைந்துள்ளதாகவும், கடல் உணவுகளைப் பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றதாகவும் நாச்சிக்குடா மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்திய ரோலர் படகுகளின் வருகையின்மையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் இந்திய ரோலர் படகுகள் வடபகுதி கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து கடல் உணவுகளைப் பிடிக்கும் போது, மீனவர்களாகிய தாம் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கியதாகவும், தற்போது எந்த சிரமமுமின்றி கடல் உணவுகளைப் பிடிப்பதாகவும் தெரிவித்தனர்.

தற்போது ஒரு கிலோ மீன், இறால், கணவாய், நண்டு போன்ற கடல் உணவுகள் 300 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றதாகவும், கொள்வனவும் அதிகமாகக் காணப்படுகின்றதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலைமை நீடிக்குமாயிருந்தால், தாம் யுத்தத்தினால் இழந்தவற்றினை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும் என்றும், அதேவேளை, தமது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள முடியாதெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (25)

# தொடரும் ஆஸி பயணம்
# நேற்றும் 44 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்குச் செல்லத் தயாராக இருந்த 44 பேர் நேற்று அதிகாலை அளுத்கம - களுவாமோதர பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் 5 பெண்களும் 6 முதல் 10 வயதுக்கிடைப்பட்ட 4 சிறுவர்களும் அடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் நால்வரும் அடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முயற்சித்தபோது மட்டக்களப்பு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 61 பேரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே அவுஸ்ரேலியாவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட இலங்கையர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நாடு திரும்பிய 39 புகலிடக் கோரிக்கையாளர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் தாம் பொறுப்பேற்றதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவித்தது.

அரசியல் புகலிடம் கோருவதற்குத் தகைமையற்றவர்கள் எனத் தெரிவித்து அவுஸ்ரேலியாவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட 39 இலங்கையர்களும் அவுஸ்ரேலியா சென்றடைந்த விதம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகிறன.

அவுஸ்ரேலிய கடல் எல்லை பாதுகாப்புகளைத் தாண்டி அந்நாட்டின் நிலப்பரப்பை அண்மித்த 66 இலங்கையர்களில் திருப்பியனுப்பப்பட்ட 38 பேர் அடங்குவதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்தார். இவர்களில் 36 ஆண்களும் 3 பெண்களும் அடங்குகின்றனர். இவர்கள் மட்டக்களப்பு, புத்தளம், கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

# சுகாதார அபிவிருத்தி
## கலந்துரையாடல்

காரைநகர் சுகாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் ஊர்காவற்துறை வைத்திய அதிகாரி பணிமனை உயர அதிகாரிகள், காரைநகர் பிரதேச செயலர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வைத்தியர்கள், பணிப்பாளர்கள், காரைநகர் அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

காரைநகர் பிரதேசத்தில் சுகாதார வசதிகளை மேம்படுத்தல், தேவைகளை கண்டறிதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

# மோட்டார் வாகனப் பதிவு
# உயர்கிறது கட்டணம்

(கொழும்பு)

மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மோட்டார் வாகன பதிவுக் கட்டணத்தை அதிகரிக்க மாகாண ஆணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிச்சந்திர தெரிவித்தார்.

இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2013 வரவு - செலவுத் திட்டத்தின்படி மோட்டார் வாகன ஆதாய பத்திரக் கட்டணம் 10 வீதத்தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கட்டண உயர்வு மேல் மாகாணத்தில் மே 2 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதாக மேல் மாகாண போக்குவரத்து ஆணையாளர் சாந்த குமார முகந்திரம் தெரிவித்தார்.

நிதி அமைச்சு இது குறித்து தமக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 35

■ வே. அர்ச்சுணன்

**இறுதி நாட்களில் அன்ரன் பாலசிங்கம் உயிருடன் இருந்த காலப்பகுதியில் கூட சர்வதேச அரசியல் அணுகுமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை பாலசிங்கத்தால் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகியிருந்தது. பல நாடு களின் தூதுவர்களை இரகசிய மான முறையிலும், தொலை பேசியிலும் தொடர்புகொண்டு தடையை நீக்குங்கள், நாங்கள் உங்களுடன் ஒத்துழைப்போம், உங்களது நிபந்தனைகளை ஏற்றுநடப்போம், நாங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மட்டுமே போராடு கிறோம், இந்தியப் பிரதமர் கொலைக்கும் எமது இயக்கத் திற்கும் எந்தச் சம்பந்தமும் கிடை யாது என சர்வதேச நாடுகளின் தடையை நீக்குவதற்கு பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்ட போதிலும் பாலசிங்கத்தின் கோரிக்கையை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை.**

அன்ரன் பாலசிங்கத்தின் போக்கை அல்லது அவரதுபேச்சைக்கட்டுப் படுத்தும் திறமை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் எவரிட மும் இல்லாத சூழ்நிலையில் பாலசிங்கத்தின் இருப்பு அல்லது பாலசிங்கம் உயிருடன் இருப்பது சம்பந்தன் போன்றவர்களுக்கு வேப்பங்காய் கசப்பது போன்ற தாகவே இருந்து வந்தது. அதாவது புலிகள் இயக்கம் வன்னியிலே சந்திப்புக்களை நடத்துகின்ற பொழுது அந்தச் சந்திப்புக்களிலே பாலசிங்கம் கலந்து கொண்டால் கூட்டமைப் பினருக்கு பிடிக்காத சந்திப் பாகவே அது இருந்து வந்தது.

இவ்வாறு அன்ரன் பாலசிங் கத்தின் பேச்சும் போக்கும் கூட்டமைப்பினருக்குப் பிடிக்காத விடயமாக இருந்தபோதிலும் புலிகளுக்கு அன்ரன் பாலசிங்கத்தின் இருப்பு அவர்களது இருப்பிற்கு பலம் சேர்ப்பதாகவே இருந்து வந் தது. அதாவது சர்வதேச இராஜ தந்திரிகளைக் கையாளுதல் சர்வதேச அரசியல் போக்கை கணித்து அதற்கேற்ப செயற்பட வழிகாட்டுதல் போன்றவற்றிற்கு அன்ரன் பாலசிங்கம் புலிகளுக்கு அத்தியாவசியமானவராக இருந்தார். அவரால் தான் புலிகள் பல சந்தர்ப்பங்களில் தப்பிப் பிழைப்பதற்கான வழி ஏற்பட்டது என்பதும் உண்மையே. இருந்த போதிலும் இறுதி நாட்களில் அன்ரன் பாலசிங்கம் உயிருடன் இருந்த காலப்பகுதியில் கூட சர்வதேச அரசியல் அணுகுமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பாலசிங் கத்தால் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலை உரு வாகியிருந்தது. அதாவது புலிகள் இயக்கத்தை சர்வதேச நாடுகள் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கத் தொடங்கிய காலப்பகுதியில் பல நாடுகளின் தூதுவர்களையும், பிரதானிகளை யும் தொடர்புகொண்ட அன்ரன் பாலசிங்கம் தமது இயக்கத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறும் தம்மை பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் இருந்து நீக்குமாறும் கோரிக்கை விடுத்த போதிலும் சர்வதேச நாடுகள் எவையும் அன்ரன் பாலசிங்கத்தின் கோரிக்கையையோ அல்லது புலிகள் வெளிப்படையாக விடுத்த கோரிக்கை யையோ அவர்கள் முள்ளிவாய்க்கால் முடிவுகளைச் சந்திக்கும் வரைக்கும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதாவது இந்தியப் பிர- தமர் ராஜீவ்காந்தியின் படுகொலை யுடன் புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கமாகவும் பயங்கரவாத இயக்க மாகவும் இந்தியாவால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்னாசிய வட்டகைக்குள் இருந்த நாடுகள் தொடக்கம் ஏனைய ஆபிரிக்க மேற்குலக நாடுகள் அனைத்தும் தொடர்ச்சியாக புலிகள் இயக்கத்தை தடைசெய்யத் தொடங்கின. அன்ரன் பாலசிங்கம் உயிருடன் இருந்த போது பல நாடுகளின் தூதுவர் களை இரகசியமான முறை யிலும், தொலைபேசியிலும் தொடர்புகொண்டு தடையை நீக்குங்கள், நாங்கள் உங் களுடன் ஒத்துழைப்போம், உங்களது நிபந்தனைகளை ஏற்றுநடப்போம், நாங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மட்டுமே போராடுகிறோம், இந்தியப் பிரதமர் கொலைக்கும் எமது இயக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என சர்வதேச நாடுகளின் தடையை நீக்குவதற்கு பகீரதப் பிரயத்தனங் களை மேற்கொண்ட போதிலும் பாலசிங்கத்தின் கோரிக்கையை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ள வில்லை. இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய அரசாங்கம் இரண்டும் உங்கள் மீதான தடையை நீக்கினால் நாங்கள் உங்கள்மீது விதித்திருக்கின்ற தடையையும் நீக்குவது தொடர்பில் பரிசீலிக்க முடியுமென சொல்லி சர்வதேச நாடுகள் தடையைத் தொடர்ந்தும் நீடித்தன.

ராஜீவ்காந்தியை தமது இயக்கம் படுகொலை செய்யவில்லை என்று சர்வதேச நாடு களிடம் புலிகள் கூறிவந்த போதிலும், சர்வதேச பத்திரிகையாளர்களையும் உள்ளூர் பத்திரிகையாளர்களையும் உள்ளடக்கி புலிகளால் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில், ராஜீவ்காந்தியின் படு- கொலை ஒரு துன்பியல் சம்பவம் என்றும் அந்தச் சம்பவத்திற்கு தாங்கள் வருந்துவது போன்றும் கருத்தினை வெளியிட்டு அந்தக் கொலைக்கான பொறுப்பினை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து புலிகள் இயக்கம் தொடர்ச்சியாக பல நெருக்கடிகளை சந்திக்கத் தொடங்கியது.

ஏற்கனவே அந்த பத்திரிகையாளர் மாநாட்டினை ஒழுங்குபடுத்திய அண்டை நாட்டின் புலனாய்வுத்துறை யாழில் உள்ள சப்ரா நிறுவன பத்திரிகையின் பிரதான ஊடகவியலாளர் மூலம் பாலசிங்கத்தை அணுகி பிரபா- கரனைப் பொறிக்குள் சிக்க வைத்த விடயத்தை நான் இத் தொடரில் ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தேன். இப்பத்திரிகையாளர் மாநாட்டில் நடந்த இன்னொரு விடயத்தையும், இதில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்குமென நினைக்கிறேன்.

அதாவது புலிகள் இயக்கம் உள்ளூரில் சிறுவர்களை படைக்கு இணைத்தல் மற்றும் கூடுதலான வரி அறவிடுதல் உள்ளிட்ட சில செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த போதிலும், உள்ளூரில் இடம்பெற்ற சில செயற்பாடுகள் வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கு தெரியாத விடயங்களாக இருந்து வந்தன. இந்த நிலையில் பிரபாகரனால் நடத்தப்பட்ட அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் உள்ளூர் பத்திரிகையாளர்கள் கேள்விகள் கேட்பதற்கு மறைமுகமான தடை ஒன்றை புலிகள் ஏற்படுத்தி இருந்தனர். இந்த நிலையில் புலிகள் இயக்கத்தின் சர்வதேச வானொலி யான ஐ.பி.சி-யில் மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளராக இருந்து பின்னர் சுட்டுக்கொல்லப்பட்ட ஐ.நடேசன் மற்றும் ஐ.பி.சி வானொலி யின் யாழ்.மாவட்ட செய்தியாளராக இருந்த தவச்செல்வன் போன்றவர்கள் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தபொழுது ஒரு கட்டத்தில் அன்ரன் பாலசிங்கம் நடேசனையும், தவச்செல்வனையும் கேள்விகள் கேட்கவிடாமல் தடுத்ததுடன் நீங்கள் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் சென்ற பின்னர் உங்களது சந்தேகங்களை பின்னர் கேட்டுக்கொள்ளுங்கள் இப்பொழுது வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள் என தொடர்ந்தும் கேள்விகள் கேட்காமல் தடுத்துக் கொண்டார்.

அதாவது கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வரி அறவீடு மற்றும் சிறுவர்களை படைக்குச் சேர்த்தல் போன்ற விடயங்களை நடேசன் சில வேளைகளில் கேட்டுவிட்டால் அது இயக்கத்திற்கு மைனஸ் பொயின்ராக மாறிவிடும் அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செய்தியாளர் இந்தக் கேள்வியை கேட்டால் அதனை வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் நம்புவதுடன் தாங்கள் அறிந்த தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தி விடுவார்கள் என்ற அச்சத்திலேயே உள்ளூர்ப் பத்திரிகையாளர்கள் கேள்விகள் கேட்பது தடுக்கப்பட்டிருக்கலாம். இருந்தபோதிலும் சந்திப்பின் முடிவில் உள்ளூர் பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்பதை தடுத்த விடயம் தொடர்பில் அன்ரன் பாலசிங்கத்திடமும், தமிழ்ச்செல்வனிடமும் உள்ளூர்ப் பத்திரிகையாளர்கள் கடும் ஆட்சேபனையை வெளியிட்ட போது, நீங்கள் எங்களது ஆட்கள் நாங்கள் உங்களை உரிமையுடன்தானே தடுத்தோம். அதனைப் பெரிதுபடுத்த வேண்டாம் என தனது வழமை யான பாணியில் சிரித்தவாறு தமிழ்ச்செல்வன் சமாதானம் சொன்ன போதிலும் நடேசன் இந்தச் செயற்பாட்டை வெளிப்படையாக விமர்சனம் செய்து கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ்வாரப் பத்திரிகை ஒன்றில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தார். இக்கட்டுரை அன்றைய நாட்களில் விடுதலைப் புலிகளுக்கு ஒரு மைனஸ் பொயின்ராகவே அமைந்தது.

இவ்வாறு சப்ரா நிறுவனப் பத்திரிகையின் பத்திரிகையாளர் அண்டை நாட்டின் புலனாய்வுத் துறையுடன் “செற்றப்” செய்த பத்திரிகையாளர் மாநாடு விடுதலைப் புலிகளுக்கு சகல விதத்திலும் பாதிப்பான செயற்பாடாகவே அமைந்தது. அதன் பின்னர் புலிகள் இயக்கம் சகல வழிகளிலும் நலிவடையத் தொடங்கியதை பேச்சாளர் அன்ரன் பாலசிங்கத்தாலும் ஒன்றும் செய்யமுடியவில்லை. இதேவேளையில்தான் குறிப்பாக கருணாவின் பிரிவு பால்ராஜின் இழப்பு அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பு தமிழ்ச்செல்வனின் இழப்பு என தொடர்ந்து நெருக்கடிகளும் தளபதிகளின் இழப்புகளும் புலிகள் இயக்கத்திற்கு தொடர் பின்னடைவுகளாக நடைபெற்றன. இந்த தொடர்ச்சியான பின்னடைவுகள் எதுவரை சென்றன? இந்தப் பின்னடைவுகளை தமிழ் ஊடகங்கள் கண்டு கொண்டனவா? இந்தப் பின்னடைவுகள் புலிகள் இயக்கத்தின் அழிவிற்கு எது- வரை வித்திட்டன? என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

**இவ்வாறு சப்ரா நிறுவனப் பத்திரிகையின் பத்திரிகையாளர் அண்டை நாட்டின் புலனாய்வுத் துறையுடன் ‘செற்றப்’ செய்த பத்திரிகையாளர் மாநாடு விடுதலைப் புலிகளுக்கு சகல விதத்திலும் பாதிப்பான செயற்பாடாகவே அமைந்தது. அதன் பின்னர் புலிகள் இயக்கம் சகல வழி களிலும் நலிவடையத் தொடங்கியதை பேச்சாளர் அன்ரன் பாலசிங்கத்தாலும் ஒன்றும் செய்யமுடியவில்லை.**



# குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படமாட்டாது

## – அரசாங்கம் தெரிவிப்பு



குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்பது நல்லிணக்க மாகாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு தண்டனை விதிப்பதனை அரசாங்கம் நல்லிணக்கமாக கருதவில்லை எனவும், காயங்களை ஆற்றுவதே முக்கியமானது எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித் கொஹணே தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடாத்தி தண்டனை விதிக்குமாறு இலங்கை மீது மிதமிஞ்சிய அளவில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். உலகின் ஏனைய நாடுகளில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு கூடுதல் காலம் எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் தொடர்பிலான சகல விடயங்கள் குறித்தும் உள்நாட்டு ரீதியான விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை அரசாங்கம் உருவாக்கியுள்ளதாகவும், இது சர்வதேச தரத்திலானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

சட்ட மா அதிபர் திணைக்களமும், இராணுவ நீதிமன்றமும் இது தொடர்பில் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். உலகின் ஏனைய நாடுகளை விடவும் துரித கதியில் இலங்கையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைமை நிறுவப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்க முனைப்புக்களில் நிலவும் சிக்கல்களை அரசாங்கம் புரிந்து கொண்டு செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். முழு அளவிலான நல்லிணக்கத்தை குறுகிய சில ஆண்டுகளில் ஏற்படுத்திவிட முடியும் என்பதில் நம்பிக்கை கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரே இரவில் இயல்பு நிலைமையை ஏற்படுத்த முடியும் என எவரும் கருதி விடக் கூடாது என் பாலித கொஹணே தெரிவித்துள்ளார்

# குப்பிலாம்பு யுகத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர் மக்கள்

## வேதனை கொள்கிறார் பொன்சேகா



குப்பி லாம்பு யுகத்திற்கு அரசாங்கம் மக்களைத் தள்ளியுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை ஈடு செய்யும் நோகக்கில் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மக்கள் மின்சாரக் கட்டணம் பற்றியே அதிகம் பேசுகின்றனர். மின்சாரக் கட்டணப் பிரச்சினை மக்களைப் பெரிதும் தாக்கியுள்ளது. குறைந்தளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவோரே இந்த புதிய கட்டண அதிகரிப்பினால் பாதிக்கப்படுவர். மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய முடியாவிட்டால் அந்த அரசாங்கத்தை தோல்வியடைந்த அரசாங்கமாகவே கருத வேண்டும். இந்த ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பி மக்களின் இதயத் துடிப்பை உணர்ந்தவர்களை ஆட்சிப் பீடத்தில் ஏற்ற வேண்டும். மின்சாரக் கட்டண உயர்விற்கு எதிராகப்போராட்டங்கள் நடத்தப்படும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அதுல்கோட்டே பிரதேசத்தில் அமைந்துள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

# பணியாளர்களை அழைத்துவராமல் நடாத்தப்படும் களியாட்ட நிகழ்வுகள்

## அரசைச் சாடுகிறது ஐ.தே.க



வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வினைக் காணாமல் அரசாங்கம் களியாட்ட நிகழ்ச்சிகளை நடத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வெளிநாடுகளிலுள்ள பணியாளர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கம். இரண்டு மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணியாற்றுகின்றனர். நாட்டின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இது மிகப்பெரிய எண்ணிக்கையாகும். சவுதி அரேபியாவின் ஜித்தாவில் அசௌகரியங்களுக்குள்ளான இலங்கையர்கள் குறித்து தற்போது விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

அரசாங்கம் நாம் தெரிவிப்பதைக் கருத்தில் கொள்ளுமாயின் விசேட விமானமொன்றை அனுப்பி நாளை அல்லது நாளை மறுதினம் அவர்களை அழைத்து வர வேண்டும். தற்காலிக விமான அனுமதிப் பத்திரத்தை தயாரிக்க சில நிமிடங்களே தேவை. ஒரு பக்க ஆவணமே அது. 765 பேரையும் நாளை மறுதினமே அழைத்துவர முடியும்.

முகவர் நிலையங்கள் மீண்டும் இவர்களை ஒப்பந்த அடிப்படையில் உரிமையாளர்களுக்கு ஒப்படைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும். வெளிநாட்டிலுள்ள எமது பணியாளர்கள் முகவர் நிலையங்களிலுள்ளவர்களிடமும் அடிவாங்குகின்றனர். துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் களியாட்ட நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர், எனத் தெரிவித்தார்.

# புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டு சிங்கள மீனவருக்கு 2 வருட சிறை

(கொழும்பு)

கொழும்பு துறைமுகம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்த தேவையான தகவல்களை வழங்கியவருக்கு இரண்டு வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி பி.பத்மன் சூரசேன இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

விடுதலைப்புலிகளிடம் மூன்றரை இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு, தகவல்களை வழங்கியதாக கூறப்படும் சிலாபம் பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த அன்டன் ரோஷன் நிஷாந்த பெர்ணான்டோ என்ற மீனவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி மற்றும் 2006 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி ஆகிய திகதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் புலிகளின் கடற்படைத் தளபதி சூசையை சந்தித்துள்ளார்.

அவரது ஆலோசனையின்படி கோபால் லோகேஷ்வரன் என்ற புலி உறுப்பினருக்கு சிலாபத்தில் இருந்து கொழும்பு துறைமுகத்திற்கு படகில் செல்ல வழியை காட்டிக் கொடுத்துள்ளதாக குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வர்த்தக விவசாயப் பண்ணைகள் நாடளாவிய ரீதியில் அமைப்பு

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் உயர் தரத்திலான 250 வர்த்தக விவசாயப் பண்ணைகளை நிர்மாணிப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது. மரக்கறிகள், பழ வகைகள், கிழங்கு உள்ளிட்ட மேலதிக பயிர்களைக் கொண்ட இவ்வாறான விவசாயப் பண்ணைகளை உருவாக்குவதன் மூலம் நுகர்வோருக்கு தரமான புதிய உற்பத்திப் பொருட்களை பெற்றுக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரு மாவட்டத்தில் 10 விவசாயப் பண்ணைகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என அறிவித்துள்ள அமைச்சகம் பொருத்தமான விவசாயிகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அதிக பட்சமாக 5 இலட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த விவசாய உபகரணங்களை வழங்குவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

# மின் கட்டண அதிகரிப்பினால் பொருளாதார ரீதியில் பின்னடைவு

## – அசாத் சாலி தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டண உயர்வால் மக்கள் பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவினை எதிர்நோக்கியுள்ளனர் என முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார். கொழும்பு பான்ஸ் பிளேஸில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

நம் நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு நாளைக்கு தனியொரு மனிதனின் வாழ்க்கைச் செலவுக்கு 1300 ரூபா முதல் 1500 ரூபா வரை தேவைப்படுகின்றது. இந்த நிலைமையை அரசு மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் மின்சாரக் கட்டண உயர்வால் சாதாரண மக்கள் பொருளாதார ரீதியில்



பாரிய பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளனர். அரசாங்கம் திருடர்களைப் பாதுகாக்கின்ற அதேவேளை, நல்லவர்களையும் திருடர்களாக மாற்றுகின்றது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களுக்கு மருத்துவ வசதிகள் இல்லை. இந்நிலையில், மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமானால் ஊழியர்களுக்கும் வருமானத்தில் 3000 ரூபாவை அதிகரிக்க வேண்டும். அதைவிட அரசாங்கம் பொதுபலசேனாவின் கையில் தான் தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.


# வெளிநாடுகளில் குற்றம் சுமத்துவோர் உண்மைநிலை அறியவரவேண்டும்

## – அழைப்பு விடுக்கிறார் பாதுகாப்புச் செயலர்

உண்மை நிலைமைகளை நேரில் வந்து பார்வையிடுமாறு வெளிநாடுகளிலிருந்து குற்றம் சுமத்தும் தரப்பினருக்கு பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ அழைப்புவிடுத்துள்ளார். யுத்தத்தின் பின்னர் நாட்டில் பாரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு இலங்கைக்கு எதிராக சிலர் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தொப்பிகலவில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ வீரர் நினை



வுத் தூபியை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக நீடித்த யுத்தம் காரணமாக மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களின் எழிலை உள்நாட்டு மக்கள் மட்டுமன்றி வெளிநாட்டு மக்களும் கண்டு மகிழ்வதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் எவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனை வெளிநாட்டவர்கள் நேரில் வந்து அவதானிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# மருகிவருகின்ற பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கவேண்டியது அவசியமானது

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எம் அனைவருக்கும் உண்டு என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை தமிழ் சிங்கள புதுவருட விழா - 2013 சங்கிலியன் பூங்காவில் வட மாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் மருகி வருகின்றன. இவற்றினைக் கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.



தற்போது எமது பிரதேசங்களில் நிகழ்வுகள் தொட்டு அனைத்து விடயங்களிலும் பிற கலாசாரங்கள் கலந்து எமது தமிழ்க் கலாசாரத்தைப் பின்னடையச் செய்கிறது. எமது பிரதேசத்திற்கென்று இருக்கின்ற கலை, கலாசாரங்களினைப் பாதுகாப்பதனூடாகவே எமது பிரதேசத்தின் பிரதிபலிப்புக்களை எடுத்துக்காட்ட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உட்பட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# அணைக்கட்டு புனரமைக்கப்படுமா?

(வரணி)

வடக்கு வரணி முள்ளியில் இருந்து ஆரம்பிக்கும் வனப் பாதுகாப்பு அணைக்கட்டுகள் எவ்வித புனரமைப்புமின்றி பற்றைகள் மூடிய நிலையில் ஆங்காங்கே உடைப்பெடுத்துக் காணப்படுகிறது.

இவ் அணைக்கட்டுக்கள் முன்னோர்களால் வனப்பகுதி நீர் குடிமனைகளுக்குள் உட்புகாதவாறு அமைக்கப்பட்டிருந்தன. எனினும் இவை கவனிப்பாரற்ற நிலையில், மழை காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்தால் ஊர் மனைகளுக்குள் வெள்ளம் புகும் அபாயம் உள்ளதாகவும், இதனைப் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (150)

# முரசின் இன்றைய பலன்

(20.04.2013 - சனிக்கிழமை)

விஜய வருஷம் சித்திரை மாதம் 07 ஆம் திகதி. நட்சத்திரம் ஆயிலியம். பிற்பகல் 4.48 வரை. திதி தசமி முழுவதும். மரணயோகம். இராகுகாலம் 09.02 - 10.32 வரை. சுபநேரம் 03.02 - 4.32 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** நகைச்சுவை உணர்வுடன் பழகுவீர்கள். மனதில் இருந்த குழப்பம் சரியாகும். தொழில் அபிவிருத்தி, இனிய அனுபவம் தரும். அதிர்ஷ்டம் தேடிவரும். உபரி பண வருமானம். வீட்டை அலங்கரிப்பீர்கள். பிள்ளைகள் பெருமை அளிப்பர். குதூகலம்.

**ரிஷபம்** கலையும் மனதை ஒருமுகப்படுத்துவது நல்லது. தொழில் வளர அதிக வேலை செய்வீர்கள். வரவு அதிகரிக்கும். நலிந்திருந்த உடல்நலம் சீராகும். வாகன பயணத்தில் கவனம். வெகுநாள் விரும்பிய பொருள் வாங்குவீர்கள். வெளியூர் நற்செய்தி.

**மிதுனம்** உங்களை முன்பு தவறாக விமர்சித்தவர் அன்பு பாராட்டுவர். பெருந்தன்மை காட்டுவீர்கள். புது முயற்சிகளில் ஆர்வம். தொழில், வளர்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாகும். இல்லறத்துணை விரும்பியது செய்வீர்கள்.

**கடகம்** நண்பருக்கு, புதிய நம்பிக்கையை அளிப்பீர்கள். திட்டமிட்ட வேலைகள் முடியும். தொழிலில் இலக்கு புதிய சாதனை எட்டும். பணவரவு திருப்திகரமாகும். உடல் நலம் பலம் பெறும். சாந்த குணத்தால் சுற்றத்தினர் பிரச்சினையை சமாளிப்பீர்கள்.

**சிம்மம்** எதிர்பார்ப்புடன் இருந்த விஷயம் நிறைவேற தாமதமாகலாம். தன்னம்பிக்கையுடன் செயல்படுவது நல்லது. தொழில், நடைமுறை சீராக இருக்கும். புதிய செலவு வரும். விரும்பாத செய்தி ஒன்று வரலாம். தாயின் அன்பு, ஆசி பலம்.

**கன்னி** கிடைத்த நன்மைகளை பெரிதென போற்றுவீர்கள். புதியவர்கள் விரும்பி அன்பு காட்டுவர். தொழிலில் வளர்ச்சி நினைத்தபடி நடக்கும். ஆதாய பணவரவு. இல்லறத்துணை விரும்பியது வாங்குவீர்கள். பிள்ளைகள் பாசத்தில் மகிழ்வு.

**துலாம்** மனதில் தெளிவுடன் செயறபடுவீர்கள். திட்டமிட்ட வேலை எளிதாக நிறைவேறும். தொழில், இடையூறு விலகும். பணவரவு அதிகரிக்கும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு. நீங்கள் உறுதியாக எடுக்கும் முடிவுகளுக்கு நன்மை வரும்.

**விருச்சிகம்** செயல்களில் சிறு முரண்பாடு ஏற்படலாம். வேலையில் தற்காப்பு நடைமுறை வேண்டும். அதிக உழைப்பினால் தொழில் வளம் பெறும். மிதமான பணவரவு. கவனித்து உண்பது நல்லது. எதிர்பார்த்திருந்த உதவி கிடைக்கும்.

**தனுசு** மனதில் நம்பிக்கை வளரும். நேர்மைத்தன்மையை வலியுறுத்துவீர்கள். சோதனையை வென்று சாதனை. மரியாதை கிடைக்கும். தொழில் வளர தேவையான வசதி வரும். பணவரவும், நன்மையும் கூடும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி.

**மகரம்** மனதில் சலனமுண்டாகும். நம்பிக்கை வளர்ப்பது அவசியம். தொழிலில், கறார்த்தன்மை பின்பற்றுவீர்கள். வரவை விட செலவு கூடும். வெளியூர் பயணத்தால் பயன். பிள்ளைகளை கண்டிக்க நேரும். வழிபாடு மன திற்கு அமைதி.

**கும்பம்** செயல்களில் கவனச் சிதறல் ஏற்படலாம். அனுக்கமானவரின் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது. தொழில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு சலுகையும் உயர்வும். வாகன மாற்ற பலன்.

**மீனம்** உங்களில் சிலர், பகைமை குணத்துடன் பேசுவர். அவர்களிடம் பதில் பேசாமல் விலகுவது நல்லது. தொழிலில் வேலைச்சுமை கூடும். அளவான பணவரவு. போக்குவரத்தில் கவனம். புது முயற்சிகள் வேண்டாம். ஒய்வு உடல்நலம் காக்கும்.

# பொது சுகாதார பணிமனையால் காரைநகரில் மருத்துவமுகாம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச வைத்திய சாலையில் நாளை ஞாயிற்றுக் கிழமை ஊர்காவற்றுறை பொதுச் சுகாதார பணிமனையும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையும் இணைந்து காரைநகர் அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடனும் சிறந்த வைத்தியர்களின் உதவியுடனும் மருத்துவமுகாம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இம்முகாமில் சகல நோய்களுக்கான வைத்திய சிகிச்சைகளும், பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

குறிப்பாக நீரிழிவு, புற்று நோய், இதயநோய், நரம்பு சம்பந்தமான சகல நோய்களுக்குமான வைத்தியசேவைகள் இடம்பெறும்.

இதில் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்களைப் பரிசோதனை செய்து வைத்தியர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (50)

# மாணவர்களுக்கு பழமரக்கன்றுகள்

(வரணி)

வடக்கு வரணி யா/சைவப் பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பாடசாலை முதல்வர் வை.விஜயகுமாரனால் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இப்பழமரக்கன்றுகளை சித்திரைப் புத்தாண்டு சுபநேரத்தில் நடுகைசெய்து பயன் பெறுமாறு அதிபரால், அறிவுறுத்தப்பட்ட வேளையில், பல மாணவர்கள் புத்தாண்டு சுபநேரத்தில் இக் கன்றுகளை பாதுகாப்பான முறையில் நடுகை செய்ததாக பெற்றோர்கள் தெரிவித்தனர். (150)

# அலுவலகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அலுவலகம் கடந்த புதன்கிழமை முதல் இல 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக மாவட்ட முகாமையாளர் இ.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

முன்னர் இவ் அலுவலகம் இல 07, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(வவுனியா)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் எம். பத்மநாதன் தலைமையில் பாடசாலையின் ஐயாத்துரை மண்டபத்தில் இடம் பெறவுள்ள இவ் விசேட பொதுக் கூட்டத்தில் யாப்பு திருத்தம் தொடர்பில் பொதுச்சபை அனுமதி பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)

# இருளில் மூழ்கியுள்ள வீதி; தெருவிளக்குகள் பொருத்தப்படுமா?

(கல்வயல்)

சாவகச்சேரி - கல்வயல் பகுதியில் மடத்தடிச் சந்தியில் இருந்து சாவகச்சேரி - பெருங்குளம் சந்தியைச் சென்றடையும் குறுக்கு வீதி இருளில் மூழ்கிக் காணப்படுவதால் இவ்வீதியூடாக இரவு வேளைகளில் பயணம் செய்வோர் பலவேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது வளைவுகள் நிறைந்த வீதியாகக் காணப்படுவதுடன், ஆங்காங்கே சில பகுதிகளில் தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் ஏனைய பகுதிகள் இருளில் மூழ்கிக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.


இதேவேளை கல்வயல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அண்ணளவாக 100 மீற்றர் தொலைவில் உள்ள இரு பெரும் வளைவுப்பகுதியும், தெருவிளக்குகள் இன்றி இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இவ்வாறு தெருவிளக்குகள் இன்றி இருளில் மூழ்கிக் காணப்படும் வீதியால் பயணிகள் பயணம் செய்கின்ற நிலையில், இருளைப்பயன்படுத்தித் திருடர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபடும் சம்பவங்களும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கும் இப்பகுதி மக்கள் இவ்வீதிக்கு அவசியம் தெருவிளக்குகள் பொருத்தப்படவேண்டும் எனவும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (43)

# ஐ.பி.எல். துளிகள்




டில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஹசியின் பொறுப்பான துடுப்பாட்டமே வெற்றிக்கு முதல் காரணம். இந்த மைதானத்தில் 169 ஓட்டங்களைக் குவிப்பது எளிதான காரியம் இல்லை. ஹசி நிலைத்து நின்று ஆடியதால் கடைசிக்கட்டத்தில் அதிரடியாக ஆட முடிந்தது. எத்தனை ஓவர்கள் மீதம் உள்ளது. எதிரணியில் யார் யாருக்கெல்லாம் எத்தனை ஓவர்கள் மிஞ்சியுள்ளன என்பதைக் கணக்குவைத்து தான் துடுப்பாட்ட வீரர்களை களமிறக்கினோம் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.



சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியடைந்தது கவலை அளிக்கின்றது. தோல்விக்கான காரணங்களை கூற கடினமாக இருக்கிறது. அணியில் உள்ள ஒவ்வொரு வீரருமே தங்கள் ஆட்டத்தை மேம்படுத்திக்கொண்டால் மட்டுமே வெற்றியைத் தேட முடியும். தொடர் தோல்விகள் எங்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இனி வரும் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சி செய்வோம் என டில்லி அணிக் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.



ருவென்ரி–20 போட்டி பந்துவீச்சாளர்களுக்கு எப்போதுமே மிகப்பெரிய சவாலானது. துடுப்பாட்ட வீரர்கள் அடித்து ஆடும் போட்டி என்பதால் பந்து வீச்சாளர்களின் நிலை கஷ்டம் தான். இந்தியா போன்ற ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏற்ற வகையில் இருக்கும். இதனால் பந்து வீச்சு என்பது மிகவும் கடினமானது. ராஜஸ்தான் அணியின் அஜித் சண்டில்லா மிகவும் சிறப்பாகப் பந்து வீசினார். டெண்டுல்கர், பொண்டிங் விக்கெட்டை தொடக்கத்திலேயே கைப்பற்றி ராஜஸ்தான் அணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினார் என மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.



சச்சின், பொண்டிங் ஆகியோரின் விக்கெட்டுகளை வீழ்த்தியது, 2012 ஐ.பி.எல். போட்டியில் நான் வீழ்த்திய ஹட்ரிக் விக்கெட்டைவிட சிறந்ததாகும். அவர்கள் இருவரையும் ஆட்டமிழக்கச் செய்தது இரு ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தியது போன்றதாகும். அவர்களை வீழ்த்தியதை இதுவரை என்னால் நம்ப முடியவில்லை என ராஜஸ்தான் சகலதுறை வீரர் அஜித் சான்டிலா தெரிவித்துள்ளார்.

# ஓய்வென்றால் அலர்ஜி



(புதுடில்லி)

எப்பொழுது ஓய்வுபெறவேண்டும் என்பது எனக்குத் தெரியும். எனது ஓய்வு குறித்து கதைக்க முற்படுவோர் தங்கள் வேலையைச் சரியாகச் செய்ய முயற்சியுங்கள் என நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த வீரர் சச்சின் டெண்டுல்கர், ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்று விட்டு, டெஸ்டில் மட்டும் கவனம் செலுத்தி வருகிறார். டெஸ்டிலும் அவரது ஆட்டம் இப்போது குறிப்பிடும்படி இல்லை. இதனால் கிரிக்கெட்டுக்கு அவர் முழுமையாக முழுக்குப் போட வேண்டும் என முன்னாள் வீரர்கள் பலரும் கூறி வருகிறார்கள். இந்த நிலையில் டில்லியில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட டெண்டுல்கர் இது தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில், எனது ஓய்வு குறித்த கேள்விகளைத் தான் நிறையப் பேர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். 2005ஆம் ஆண்டில் இருந்து இப்போது வரைக்கும் இந்த கேள்வி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த விடயத்தில் எனது பதில் என்னவென்றால், நான் எனது வேலையை சரியாகச் செய்வேன், நீங்கள் உங்கள் வேலையை சரியாகச் செய்யுங்கள் என்பது தான். ஓய்வு தொடர்பான மற்றவர்களின் விமர்சனங்கள் என்னை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. கிரிக்கெட்டை பற்றி எனது குடும்பத்தினரிடம் நான் விவாதிப்பதில்லை. மற்ற விடயங்களைப் பற்றி மட்டுமே அவர்களிடம் பேசுவேன். கிரிக்கெட் பற்றி விவாதிக்க விரும்பினால், எனது சகோதரருடன் பேசுவேன் என்றார்.

# தோல்வி



(மான்டி–கார்லோ)

மொனாகோவில் நடக்கும் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில், இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரே தோல்வியடைந்து வெளியேறினார். மொனாகோவில் உள்ள மான்டி–கார்லோ நகரில், ஏ.டி.பி., மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில், இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்காவை சந்தித்தார். இதில் முர்ரே 1–6, 2–6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார்.

மற்றொரு போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஆர்ஜென்ரீனாவின் ஜுயன் மொனாகோவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய ஜோகோவிச் 4–6, 6–2, 6–2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். மற்றப் போட்டிகளில் அசத்திய ஸ்பெயினின் ரபெல் நடால், பிரான்சின் ஜோ–வில்பிரைட் சோங்கா, ரிச்சர்ட் காஸ்குயட் உள்ளிட்டோர் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றனர்.

# காலம் பிந்திய தண்டனை



(கான்பெர்ரா)

அவுஸ்ரேலிய நாட்டின் சார்பாக, கடந்த 2012ஆம் ஆண்டு, இங்கிலாந்து நாட்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில், ஆறு நீச்சல் வீரர்கள் பங்குபெற்றனர். முந்தைய போட்டிகளில் பதக்கங்களைக் குவித்த இவர்கள், லண்டன் ஒலிம்பிக்கில் ஒரேயொரு தங்கப்பதக்கத்தை மட்டுமே வென்றனர்.

அவுஸ்ரேலிய நாட்டின் நீச்சல் குழு, இவர்களின் தவறான நடவடிக்கைகளுக்காகத் தற்போது தண்டனை அளித்துள்ளது. இவர்களில் ஐந்து வீரர்கள், பயிற்சிக் காலத்தின்போது ஊக்க மருந்து எடுத்துக்கொண்டதை, கடந்த பெப்ரவரி மாதம் ஒத்துக் கொண்டுள்ளனர்.

இந்த 400 மீற்றர் தொடர் நீச்சல் வீரர்கள், இந்த மருந்தினால்தான் செயல்குறைவுடன் இருந்தார்கள் என்று நீச்சல் குழு ஆணையம் ஒலிம்பிக் சபையிடம் புகார் அறிக்கை அனுப்பியுள்ளது. அதனால் இவர்கள் தண்டனைத் தொகையைக் குழுவிடம் செலுத்த வேண்டும் என்றும், தற்காலிகமாக இவர்கள், நீச்சல் குழுவிலிருந்து விலக்கப்படுகின்றார்கள் என்றும் அவுஸ்ரேலிய நீச்சல் குழு ஆணையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து; அவுஸ்ரேலிய நாட்டின் ஒலிம்பிக் குழுவால் பரிசீலிக்கப்படும் என்று கூறிய ஆணையம், வீரர்களின் தண்டனைத் தொகையையோ, குழுவிலிருந்து நீக்கப்படுகின்ற காலகட்டத்தையோ குறிப்பிடவில்லை.

# காயத்தால் விலகல்



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இருந்து பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் உமர் குல் காயம் காரணமாக விலகினார். இங்கிலாந்தில், ஐ.சி.சி., சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் ஜூன் 6ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, அவுஸ்ரேலியா உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன. இத்தொடருக்கான 30 பேர் கொண்ட உத்தேச அணியை,பாகிஸ்தான் கிரிக்கெட் சபை(பி.சி.பி.,)சமீபத்தில் அறிவித்தது. இதில் வேகப்பந்துவீச்சாளர் உமர் குல் இடம் பெற்றிருந்தார். சமீபத்திய தென்னாபிரிக்க பயணத்தின் போது வலது முழங்காலில் காயமடைந்த உமர் குல்,தொடரில் முழுமையாகப் பங்கேற்கவில்லை.இவரது காயத்துக்கு எம்.ஆர்.ஐ.,ஸ்கான் எடுத்துப் பார்த்ததில்,உடனடியாக சத்திரசிகிச்சை செய்ய அறிவுறுத்தப்பட்டார். இதனையடுத்து அடுத்த மாதம் அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் உள்ள பிரபல வைத்தியரிடம் சத்திரசிகிச்சை செய்யவுள்ளார். அதன்பின் மறுவாழ்வுப் பயிற்சி மேற்கொள்ள உள்ள இவர், குறைந்தது 8 முதல் 12 வாரங்கள் ஓய்வில் இருக்க நேரிடும். இதனால் இங்கிலாந்தில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உத்தேச அணியில் இடம் பெற்றுள்ள இவருக்குப் பதிலாக மாற்று வீரரைத் தேர்வு செய்ய, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.,),ஐ.சி.சி.,யிடம் அனுமதி கேட்டுள்ளது.இதுகுறித்து பி.சி.பி. வெளியிட்ட அறிக்கையில், வலது முழங்காலில் காயமடைந்துள்ள உமர் குல், விரைவில் சத்திரசிகிச்சை செய்யஇருப்பதால், சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்க முடியாது. ஐ.சி.சி., அனுமதி அளிக்கும் பட்சத்தில், இவருக்குப் பதிலாக மாற்று வீரரை விரைவில் தேர்வு செய்வோம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

# புத்தாண்டு விளையாட்டு விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் பொலிஸாரும், மானிப்பாய் வர்த்தக சங்கமும், சிவில் பாதுகாப்புக் குழுக்களும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விளையாட்டு விழா இன்று காலை 9.00 மணிக்கு மானிப்பாய் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி மல்கம்பேர்ட் தலைமையில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இப்போட்டி நிகழ்வில் தலையணைச் சண்டை, கிறிஸ் மரம் ஏறுதல் உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுகள் இடம்பெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(104, 54)

## இன்றைய ஆட்டம்

Season 6



IPL

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் சென்னை சூப்பர் கிங்ஸ்

இடம்: கொல்கத்தா

மாலை 4.00 மணி

டில்லி டேர்டெவில்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ்

இடம்: டில்லி

மாலை 8.00 மணி

# தோல்வியால் வந்த வினை

(பியூனஸ் அயர்ஸ்)

ஆர்ஜென்ரீன கால்பந்து வீரர்கள் உலகப் பிரசித்தி பெற்றவர்கள். அவர்களைவிட அந்த நாட்டு ரசிகர்கள், கால்பந்து விளையாட்டின் தீவிர வெறியர்கள் என்றே சொல்லலாம்.

ஆர்ஜென்ரீனாவில் உள்ள பல குழுக்களும் இணைந்து விளையாடும் உள்ளூர் போட்டிகள், ஆர்ஜென்ரீனா நாட்டின் பியூனஸ் அயர்ஸ் நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த புதன்கிழமை இரண்டாவது பிரிவில் விளையாடிய "ஹராகன் குழுவினர், தங்களை எதிர்த்து விளையாடிய கோடாய் க்ருஸ் குழுவினரிடம், பெனால்டி கோலில் தோற்றுப்போனார்கள்.



இதனால் ஆத்திரமடைந்த ரசிகர்கள், முகமூடியணிந்துகொண்டு இரண்டு பேருந்துகளில், வீரர்கள் தங்கியிருந்த விளையாட்டு மைதானத்தின் ஓய்விடத்திற்கு வந்துள்ளனர்.

அங்கு பயிற்சி முடிந்து, வீரர்கள் தங்களுடைய அறைகளில் குளித்துக்கொண்டிருந்தனர். அத்துமீறி உள்ளே நுழைந்த ரசிகர்கள் அவர்களை மிரட்டியதுடன் அவ்வீரர்களைத் தாக்கியுள்ளனர். பின்னர், வெளியேறும்போது,வீரர்களின் உடைமைகளைத் திருடிச் சென்றதுடன் அல்லாமல், வெளியே நிறுத்தப்பட்டிருந்த அவர்களின் கார்களையும் சேதப்படுத்திச் சென்றுள்ளனர்.

எட்டுச் கார்களை சேதப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட பயிற்சியாளர் ஜோஸ் மரியா லோப், தாங்கள் 15-0 என்ற கணக்கில் தோற்றிருந்தால் கூட ரசிகர்கள் நடந்துகொண்ட விதம் நியாயமாகாது என்று கருத்துத் தெரிவித்தார்.



வேலணைப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் புங்குடுதீவு சன்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 50 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரினுடன் முதலிடத்தைப் பிடித்துக் கொண்ட புங்குடுதீவு சன்ஸ்ரார் விளையாட்டுக்ழகத்தினரைக் காணலாம். இப்போட்டியில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் 43 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93, 21)

# வலய மட்ட பெண்கள் ஹொக்கி போராடி வென்றது உடுவில் மகளிர்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் பலத்த போராட்டத்தின் பின்னர் உடுவில் மகளிர் கல்லூரி வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளைப் பொறுத்த வரையிலும் பலம் மிக்க அணிகளாகவும் அனுபவம் கொண்ட அணிகளாகவும் காணப்பட்டமையால் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த அனைத்து முயற்சிகளும் மாறி மாறி எதிரணிகளினால் முறியடிக்கப்பட்ட நிலையில் இரு அணிகளால் ஆட்டம் முடிவடையும் வரை கோல்கள் எதனையும் பெற முடியாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்விகளை தீர்மானிக்க வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு மூலம் உடுவில் மகளிர் கல்லூரி 02-01 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

## வலய மட்ட மெய்வல்லுநர்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 23, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள பாடசாலை வீர,வீராங்கனைகளைப் போட்டி நடைபெறும் திகதிகளில் உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுள்ளார். (109)

## காலிறுதியுடன் வெளியேறியது வேலணை துறையூர் ஐயனார்

(வேலணை)

வேலணை செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரின், துறையூர் ஐயனார் 'பி' அணி காலிறுதியுடன் வெளியேறியது.

செட்டிபுலம் ஐயனார் சனசமூக நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தீவக கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்துப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டி ஒன்றில் துறையூர் ஐயனார் 'பி' அணியும், நண்பர்கள் 'ஏ' அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நண்பர்கள் அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதேவேளை, துறையூர் ஐயனார் 'ஏ', அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் 'ஏ', செட்டிபுலம் ஐயனார் 'ஏ' ஆகிய அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

## குகசீலன், பார்த்தீபன், ரவி சிறப்பான செயற்பாடு

# கிறாஸ் ஹொப்பர்ஸ் அபார வெற்றி




(தெல்லிப்பளை)

குகசீலன், பார்த்தீபன், ரவி ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணிக்கெதிரான போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ் ஹொப்பர்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்று கடந்த சனிக்கிழமை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

30 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தெல்லிப்பளை கிறாஸ் ஹொப்பர்ஸ் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆரம்பம் முதலே கிறாஸ் ஹொப்பர்ஸ் அணி ஓட்டங்களைக் குவித்த வண்ணமிருந்தது. குறிப்பாக, குகசீலன், பார்த்தீபன், குகதாஸ் ஆகியோரின் ஆட்டம் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியின் பந்துவீச்சாளர்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியதுடன் அணி பலமான ஓட்ட எண்ணிக்கையைப் பெறவும் வழிவகுத்தனர். இறுதியில் கிறாஸ் ஹொப்பர்ஸ் அணி 30 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குகசீலன் 59, பார்த்தீபன் 39, குகதாஸ் 28, ராஜசுந்தர் மற்றும் ரவி ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 26, 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுரேன் இரண்டு, கோபி, திலக்சாந் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 240 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி பார்த்தீபன், ரவி ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு முனையில் நிலைத்து நின்ற விதுசன் பொறுமையாக ஆடி அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தார். இறுதியில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 26.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விதுஷன் மிகவும் பொறுமையாக ஆடி 87 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கோபி 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பார்த்தீபன் நான்கு, ரவி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் தெல்லிப்பளை கிறாஸ் ஹொப்பர்ஸ் அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (42)

# மாவட்ட மட்ட சதுரங்கப் போட்டி கிளிநொச்சி. ம.வி. 3 பிரிவில் சம்பியன்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்கப்போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் மூன்று பிரிவுகளில் முதலிடத்தையும் ஒரு பிரிவில் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மட்ட சதுரங்கப் போட்டியின் முடிவுகள் வருமாறு:

19 வயது ஆண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் முதலாமிடம், கிளிநொச்சி மத்திய கல்லூரி இரண்டாமிடம், பளை மத்திய கல்லூரி மூன்றாமிடம்.

19 வயது பெண்களுக்கான பிரிவில் வட்டக்கச்சி மகா வித்தியாலயம் முதலாமிடம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம் இரண்டாமிடம், கிளிநொச்சி மகா வித்தியாலயம் மூன்றாமிடம்.

15 வயது ஆண்களுக்கான பிரிவில், கிளிநொச்சி மகா வித்தியாலயம் முதலாமிடம், கிளிநொச்சி மத்திய கல்லூரி இரண்டாமிடம் வட்டக்கச்சி மகா வித்தியாலயம் மூன்றாமிடம்.

15 வயது பெண்களுக்கான பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் முதலாமிடம் உருத்திரபுரம் மகா வித்தியாலயம் இரண்டாமிடம் வட்டக்கச்சி மகா வித்தியாலயம் மூன்றமிடம்.

மாவட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்ட பாடசாலை அணிகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பீற்றர்சன் அவுட்

(லண்டன்)

இங்கிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனுக்கு ஏற்பட்ட உபாதை இன்னமும் குணமாகாததால் நியூசிலாந்திற்கெதிரான தொடரில் அவர் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நியூசிலாந்தில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரின்போது உபாதைக்குள்ளான கெவின் பீற்றர்சன், நியூசிலாந்திலிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பியிருந்தார்.

அவருக்கு 6 வாரங்கள் ஓய்வு தேவையென அறிவிக்கப்பட்ட போதிலும், தற்போது அவருக்கு மேலதிக வாரங்கள் தேவைப்படுவதாகவும், எனவே மே மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நியூசிலாந்திற்கெதிரான தொடரில் அவர் பங்குபற்றமாட்டார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கெவின் பீற்றர்சனுக்கு அடுத்த வாரத்தில் மீண்டும் ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்படுமெனவும், அதன் பின்னர் அவரது மேலதிக ஓய்வு குறித்த தீர்மானங்கள் எடுக்கப்படுமெனவும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.


நடுவரிசையில் பலமான துடுப்பாட்ட வீரராக விளங்கும் பீற்றர்சன் இத்தொடரில் பங்குபற்ற முடியாமல் போனமை அணிக்குப் பெரும் பாதிப்பான விடயம். இருப்பினும், இளம் வீரர்கள் அந்தப் பாதிப்பை ஈடுசெய்யும் வகையில் செயற்படுவார்கள் எனவும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# உள்ளூர் யதார்த்தமும் உலகெங்குமான நாடகங்களும்

முருகபூபதி கட்டுரையிலிருந்து.

பிரிவினைவாதம், இறுதியில் வல்லாதிக்க நாடுகளின் கையில்தான் எம்மைக் கொண்டுபோய்விடும் என்பதை 1972 இலேயே ஒரு இடதுசாரித்தோழர் சொன்னது நினைவுக்கு வருகிறது.

1972 காலப்பகுதியில்தான் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் இடதுசாரிகள்









அமைத்த கூட்டரசாங்கத்தில் குடியரசு அரசியலமைப்பு வந்தது. பல்கலைக் கழக அனுமதியில் தரப்படுத்தல் வந்தது. அதன் விளைவு காங்கேசன்துறை இடைத்தேர்தல், வட்டுக்கோட்டைத் தீர்மானம், தமிழ் இளைஞர் கைது, உணர்ச்சிக் கவிஞருக்கு இரத்தத்திலகம், 1977, 1981, 1983 இனக்கலவரம், 1981 இல் யாழ். பொதுநூலகம் எரிப்பு, ஆயுதப்போராட்டம்.... வெலிக்கடைச் சிறை படுகொலைகள்,... துரையப்பா முதல் அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் பிரேமதாஸ வரையில் கொலைகள்... தமிழகத்தில் பத்மநாபா முதல் ராஜீவ்காந்தி வரையில்.... இப்படியாக தொடர்ந்தது படுகொலைக் கலாசாரம்,

சகோதரப்படுகொலைகள், அநுராதபுரத்தில் சிங்கள மக்களும் காத்தான்குடியில் முஸ்லிம் மக்களும் படுகொலை.... வடக்கிலிருந்து புலிகளினால் முஸ்லிம் மக்கள் வெளியேற்றம்.... பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம், சமாதான காலம்.... மீண்டும் இரண்டாம் கட்டம் மூன்றாம் கட்டம், நான்காம் கட்டப்போர் முதலான புலிகளின் தரப்பு பிரகடனங்கள், லிபரேஷன் ஒப்பரேஷன், ஜயசிகுரு (வெற்றி நிச்சயம்) முதலான அரசு தரப்பிலான போர்ப்பிரகடனங்கள்....

அப்பாவி மக்கள் வன்னிக்கு இடம் பெயர்க்கப்பட்டு அங்கு அவலச்சாவுகளுடனும் முள்ளிவாய்க்காலில் பிரபாகரனின் அழிவோடும் ஈழப்போரின் ஒரு அங்கம் முடிந்துவிட்டது.

இந்நிலையில் நாடாளுமன்ற ஆசனங்களில் தங்கியிருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு, தங்களது போராட்டத்தை மூன்று கட்டமாக வகுத்திருக்கிறார்களாம்.

முதலவது கட்டம் அகிம்சைப்போர், இரண்டாவது கட்டம் ஆயுதப்போர், தற்பொழுது மூன்றாவது கட்டம் ராஜதந்திரப்போர் எனச் சொல்கிறார்கள். இது எங்கே கொண்டுபோய் நிறுத்தும் என்பதையும் நாம் பார்ப்போம்.

கூட்டமைப்பினர், இந்தியாவினதும் அமெரிக்காவினதும் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப இயங்குபவர்கள் என்ற விமர்சனம் வெளியாகிறது. தமிழ்நாட்டில் சீமானுக்கும் நெடுமாறனுக்கும் இடையே நிழல் யுத்தம். வை.கோவுக்கும் கருணாநிதிக்கும் இடையே வெளிப்படையான யுத்தம்.. ஜெயலலிதா மத்திய அரசுக்கு சவால்விடும் யுத்தம்.... இடையில் திருமாவளவனும் பாண்டியனும் மகேந்திரனும் ராமதாஸும் இதோ நாங்களும் இருக்கிறோம் என்று போர் முரசு கொட்டுகிறார்கள். இவர்களின் உணர்ச்சியூட்டும் பேச்சுகளினால் தமிழக மாணவர்களும் தங்கள் கல்வியை புறக்கணித்துவிட்டு வீதியில் இறங்கியிருக்கிறார்கள். ஏற்கனவே நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு ஒப்பானது இன்றைய மாணவர் கிளர்ச்சி என்று வேறு எண்ணெய் ஊற்றி எரிக்கிறார்கள். அந்த நெருப்பில் சிலர் குளித்து உயிர்களை மாய்க்கிறார்கள்.

சில தமிழக இதழ்கள் தங்களது விற்பனையை அதிகரித்துக்கொள்வதற்கு வாசகவங்கியை பெருக்கிக்கொள்கின்றன. இது அரசியல் கட்சிகள் தங்களது வாக்கு வங்கியை பெருக்குவதற்கு ஒப்பானது.

தங்கள் படங்கள் வெளிநாடுகளில் சந்தையாக வேண்டும் என்பதற்காக உலகநாயகனும் சூப்பர் ஸ்டாரும் தல, தளபதிகளும் மற்றும் நடிகர்களும் உண்ணாவிரதக் காட்சிகளுக்காக கமெராக்களுக்கு முன் வந்து தோன்றுகிறார்கள். பிறகு தங்கள் நடிப்புத்தொழிலுக்குச் செல்கிறார்கள்.

எங்கள் தேசத்தின் ஈழப்போர், இறுதியில் இந்தியாவில், தமிழ்நாட்டில் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டதைத் தவிர ஈழ மக்களுக்கு எந்த விடுதலையையோ அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு எந்தவொரு உருப்படியான தீர்வையோ தரவில்லை.

இந்தப் பின்னணிகளுடன் புகலிடத்தில் வாழும் இலங்கைத் தமிழர்கள், பல்வேறு பிரிவினராக பிரிந்துள்ளனர்.

1- புலிகளை தொடர்ந்தும் ஆதரிப்பவர்கள்.

2- நாடுகடந்த தமிழ் ஈழம் பேசுபவர்கள்.

3- நடிகர் சீமானுக்குப் பின்னால் அணிதிரளுபவர்கள்.

4- சர்வதேச தமிழர்பேரவையின் மூலம் அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கலாம் என நம்புபவர்கள்.

5- இராஜதந்திரப்போர் நடத்துவதாகச் சொல்லும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிளைகளை அமைத்து கூட்டமைப்பு எம்.பி.க்கள் வரும்பொழுது சந்திப்பு விருந்துகளை நடத்துபவர்கள்.

6- இவர்களையெல்லாம் கண்டுகொள்ளாமல் அமைதியாக இருந்து இலங்கையில் நீடித்த போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித ஆர்ப்பாட்டமும் இன்றி ஏதேனும் வழியில் உதவிக்கொண்டிருப்பவர்கள்.

இதில் ஆறாவது தரப்பினர்கள் பக்கம்தான் நான் எப்பொழுதும் நிற்கிறேன். படைப்பாளிகள் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம்தான் நிற்கவேண்டும். காலத்துக்குக்காலம் அரசியல் வேடம் புனைபவர்கள் பக்கம் நிற்கமாட்டார்கள். தமிழ்நாட்டின் திராவிட பாரம்பரிய மற்றும் காங்கிரஸ் பாரம்பரிய அரசியலை நன்கு தெரிந்துகொண்டிருப்பவர்களுக்கு அவர்களது அரசியல் வேடம் பற்றியும் தெரியும். எல்லாமே தமிழகத்தின் அரசியல் கூத்துக்களாகத் தொடருகின்றன. இவர்களில் சிலர் பிரபாகரன் மீண்டும் வருவார் தமிழ் ஈழப்போராட்டம் வெடிக்கும், தொடரும் என்று வேறு கதையளந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவும் கருணாநிதியும் ஏட்டிக்குப்போட்டியாக யார் நாடகம் ஆடியது என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்துகிறார்கள். ஐ.நா. மனித உரிமைப்பேரவை வருடத்துக்கு ஒருமுறை ஊடகங்களுக்கு தீனிபோட்டு செத்தவர்களுக்கு திவசம் செய்துகொண்டிருக்கிறது.

இந்த நாடகங்களைப் பற்றி கிஞ்சித்தும் அலட்டிக்கொள்ளாத வன்னிமக்கள் கிளிநொச்சியில் காத்தவராயன் கூத்தை கண்டுகளித்துக் கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் பொன்னாலையில் சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டத்தில் மாட்டுவண்டில் சவாரிப்போட்டி நடத்துகிறார்கள். நல்லைக்கந்தன் வருடம் தவறாமல் கொடியேறிக் கொண்டிருக்கிறார். மடுத்திருப்பதி யாத்திரை தொடருகிறது.

# மணற் புயல்!

கோடை காலங்களில் பாலைவனப் பகுதிகளில் மணற்புயல் ஏற்படுவது வழக்கமான நிகழ்வாகும்.

கோடை வெப்பத்தால் காற்று இலேசாகி மேலே செல்லும்போது மிக அதிக அளவு மணல் துகள்களையும் அடித்துச்



செல்லப்படுவதையே மணற்புயல் என்கிறார்கள்.

அடித்துச் செல்லப்படும் மணல் மிக அதிக அளவு இருக்கும். சில சமயங்களில் காற்றின் வேகத்தால் 3,000 அடி உயரம் வரை எழும்பி பல்லாயிரம் கிலோமீற்றர் தொலைவு வரை இந்தப் புயல் அடிக்கும்.

எகிப்தியர்களுக்கும் பெர்சியர்களுக்கும் இடையே போர் நடைபெற்றபொழுது, ஒரு மிகப் பெரிய மணற்புயல் தோன்றி போர் வீரர்களை அழித்ததாக ஹெரோடட்டஸ் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வகை மணற்புயல் சில நிமிடங்களில் இருந்து சில மணி நேரம் வரை நீடிக்கும். மணற்புயல் ஏற்படும் சமயங்களில் பெரும்பாலும் கடைகள் எல்லாம் மூடப்பட்டு, மனிதர்கள் மறைவிடங்களுக்குச் சென்று பதுங்கிக் கொள்வர்.

பறவைகள் மணற்புயல் தோன்றும் அறிகுறிகளை முன்கூட்டியே அறிந்து கொள்வதால் வேறு இடங்களுக்குப் புலம் பெயர்ந்து தங்களைக் காத்துக் கொள்கின்றன.

மணற்புயலைத் தாக்குப் பிடிக்கும் ஒரே உயிரினம் ஒட்டகம் ஆகும். ஒட்டகத்தால் தனது நாசியை மூடிக்கொள்ள முடியும். ஆகவே மணற்புயல் ஏற்படும் சமயங்களில் அவை தமது கண்களையும் நாசியையும் மூடிக் கொண்டு தரையில் படுத்துவிடுகின்றன. அவற்றின் தோல் மிகவும் தடிப்பாக இருப்பதால் மணல் துகள்கள் பாதிப்பு எதையும் ஏற்படுத்துவதில்லை.

# கருணாநிதியின் துண்டு!

மூன்றாம் எண் குருவுக்கு உரியது. 3-ந் திகதியில் பிறந்தவர்கள் குரு ஆதிக்கம் கொண்டவர்கள். கருணாநிதி 3ஆம் திகதி பிறந்தவர். குருவிற்கு நிறம் மஞ்சள். கருணாநிதி மஞ்சள் துண்டு அணிகிறார். கோவிலுக்குப் போனால், நவக்கிரகங்களை சுற்றி வரும் போது பார்த்தால் தெரியும்... குருவுக்கு மட்டும் மஞ்சள் துண்டை இடுப்பில் சுற்றி இருப்பர். பகுத்தறிவு, சீர்திருத்தம் பேசியவர்கள் எல்லாமே, முன்பு மூட நம்பிக்கை என்று பேசி வந்ததை கைவிட்டு விட்டதைப் போலவே ஈழத்தமிழர் நிலைப்பாட்டிலும் ஆட்சியில் இருக்கும்போது ஒன்றும் இல்லாதபோது இன்னொன்றுமாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஈழத்தில் பிரச்சினை தீர்வதை விட இருந்து கொண்டிருப்பதுதான் இவர்களுக்கும் வசதி.



(வெங்கடேஷ்)

7 - (1)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்



ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளை ஒரு திரைக்கதைக்குள் பின்னி உருவாக்கப்படும் படங்களில் எனக்கு ஒரு தனி ஈர்ப்பு உண்டு. இத் தொடரிலும் "ட்ரா·. பிக்" படம் பற்றி எழுதியிருக்கிறேன், அதுவும் பலகதைகளை உள்ளடக்கியதே. எனக் குப் பிடித்த இன்னொரு படம் போல் தோமஸ் அண்டர்சன் இயக்கிய "மக்னோலியா"(1999). 2000இற்குப் பிறகு, ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளை உள்ள டக்கிய படங்களையே தொடர்ந்து எடுத்து, அந்த வகைப்பிரிவில் முக்கியமானவராக மாறியிருக்கும் ஒரு இயக்குனரைப் பற்றியே அடுத்து பார்க்கப்போகிறோம்.

(2000 முதல் 2009 வரையான பத்தாண்டு களில் புதிதாக எழுந்து வந்து உலக அளவில் கவனம் பெற்றவர்களில் முக்கியமானவர்களாக நான் கருதும் 10 இயக்குனர்களின் இந்தப் பட்டியல், தரவரிசையி லானது அல்ல என்பதை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதாவது இயக்குனர் களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் எண் வரிசை அவர்களின் தகுதி அடிப்படையில் அமைந்தது அல்ல.)

### அலெக்ஸான்ரோ கோன்ஸெலஸ் இனாரிட்டு

மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்த இனாரிட்டு, வானொலி தொகுப்பா ளராகத் தன் வாழ்வைத் தொடங்கி, இசைய மைப்பாளராகவும், தொலைக்காட்சித் தொடர் மற்றும் விளம் பரங்கள் இயக்குபவராகும் வளர்ந்தவர். இடையில் அமெரிக்கா சென்று திரைப்படக் கல்லூரி ஒன்றிலும் படித்து தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்ட பிறகே திரைத்துறைக்குள் நுழைந்தார். திரைக்கதையாசிரியர் கில்லர்மோ அர்ரியாகா-உடன் சேர்ந்து அவர் எடுத்திருக்கும் மரணம் பற்றிய மூன்று திரைப்படங்களே (Trilogy of Death) அவரை சமகாலத்தின் முக்கிய இயக்குனர்களுள் ஒரு-வராக ஆக்கியிருக்கின்றன. "அமொரெஸ் பெரோஸ்" (2000), "21 கிராம்ஸ்" (2003), "பாபேல்" (2006) என்கிற அந்த மூன்று படங்களும் "மல்டிபிள் ஸ்டோரி லைன்ஸ்" எனப்படுகிற ஒன்றுக்கு மேற்பட்ட கதையோட்டங்களைக் கொண்டவையே.

"அமொரெஸ் பெரோஸ்" என்பதை ஸ்பானிஷ் மொழியி லிருந்து வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்தால் "அன்பு ஒரு பெட்டை நாய்" என்றோ "அன்பு ஒரு நாய்" என்றோ "நாய் அன்பு" என்றோதான் வரும் என்கிறார்கள். ஆனால் அது மட்டுமே அர்த்தமல்ல, ஸ்பானிஷில் "தீவிரமான அன்பு", "அன்பின் வெற்றியும் தோல்வியும்", "அன்பு சிலநேரம் வெல்லும் சிலநேரம் தோற்கும்", "அன்பின் துயர்", "அன்பே மனிதனின் உற்ற துணை" என்பவை போன்ற பல்வேறு அர்த்தங்களைக் கொடுக்கக்கூடிய சிக்கலான சொற்சேர்க்கை அது என்றும் சொல்கிறார்கள். ஒரு எதிர்பாராத விபத்தில் சம்பந்தப்படும், ஒருவருக்கொருவர் தொடர்பில்லாத மூன்று கதாபாத்திரங்களின் தனித்தனிக் கதைகளை உள்ளடக்கியது "அமொரெஸ் பெரோஸ்". மூன்று பாத்திரங்களும் மெக்ஸிகோவின் அடித்தட்டு, நடுத்தரம், மேல்நிலை எனும் பொருளாதாரப் படிநிலை களைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறார்கள்.

முதல் கதை, தனது அண்ணனின் மனைவியை நேசிக்கும் நடுத்தரவர்க்க இளைஞனைப் பற்றியது. முரடனாகவும் கையாலாகாத வனாகவும் இருக்கும் தன் அண்ணனால் துன்பத்துக்கு ஆளாகும் அண்ணியையும், அவள் கையிலும் வயிற்றிலும் இருக்கும் குழந்தைகளையும் தான் தனியே அழைத்துச் சென்று வாழவைக்கவேண்டும் என்று இளைஞன் விரும்புகி றான். அதற்காகத் தன் நாயை பந்தயச்சண்டையில் ஈடுபடுத்திப் பெரும்பணமும், பந்தயக்காரர்களின் தீராத பகையையும் சம்பாதிக்கிறான். ஆனால் அவன் நினைத்த திற்கு மாறாக, இறுதியில் அண்ணி அவனை நிராகரித் துவிடுகிறாள். திரைக்கதையின் மையமான அந்த கார் விபத்தை நிகழ்த்துவது இந்த இளைஞன் தான்.

இரண்டாம் கதை, ஒரு புகழ்பெற்ற மொடல் பற்றியது. பெரும் பணக்கார வியாபாரி ஒருவன் தன் முதல் மனைவி யையும் குடும்பத்தையும் கைகழுவிவிட்டு வந்து, ஒரு புதிய வீடெடுத்து புதுவாழ்வை மொடலோடு ஆரம்பிக்கிறான். இந்த நிலையில், முதல்கதை யிலும் வந்த அந்த கார் விபத்தில் தன் காலை இழக்கி றாள் மொடல். ஒருநாள் அவள் தனியாக வீட்டிலிருக்கும்போது அவளுடைய செல்ல நாய், மரத்தாலான தரைத்தளத்தின் அடியில் இடுக்குக்குள் சென்று மாட்டிக்கொண்டு காணாமலா கிறது. அதை மீட்டுக்கொடுக் கும்படி இரவும் பகலும் தன் காதலனை தொல்லை செய்கி றாள் அவள். இதனால் அவர் களுடைய உறவு சிக்கலாகிறது. இறுதியில் அந்த நாய் எப் போதோ செத்துவிட்டது என்ப தையும், முடமானதால் மொடலிங் துறையும் புகழும் தன்னைவிட்டு நிரந்தரமாகப் போய்விட்டது என்பதையும் நிதர்சனமாக உணர்கிறாள் அவள்.

தெருவில் குப்பை பொறுக் கியபடி அலையும் ஒரு முதி யவரைப் பற்றியது மூன்றா வது கதை. அவர் ஒருகாலத் தில் ஆசிரியராக இருந்து, பின்பு கெரில்லாப் போராளி யாக ஆகி, சிறையில் பல ஆண்டுகளைக் கழித்தவர். இப்போது பகுதி நேரத்தில் பணத்துக்காகக் கொலை செய்யும் தொழில்முறைக் கொலைகாரராகவும் இருக் கிறார். அவருக்கு ஒரு மகள் உண்டு, இறந்துபோன அவருடைய மனைவியின் தங்கையிடம் வசதியான சூழலில் அவள் வளர்கிறாள். அவர் அவளை மிகவும் நேசிக்கிறார். ஆனால் அப்பா இறந்துவிட்டதாகவே சொல்லி வளர்க்கப்பட்ட அந்தப் பெண்ணை அவரால் நெருங்க முடியவில்லை. இதற்கிடையில், சாலையில் நடக்கும் கார் விபத்தைப் பார்க்கும் அவர், முதல்கதை இளைஞனின் நாயைக் காப்பாற்றி தன்னிடமிருக்கும் ஏராளமான நாய்களோடு சேர்த்து வளர்க்கிறார். அந்தப் பந்தய நாய் ஒருநாள் எல்லா நாய்களையும் கடித் துக் கொன்றுவிடுகிறது. அதன் பிறகு அவர் கொலைத் தொழிலை விடுகிறார்.




மூன்று கதைகளிலும் உள்ள ஒரு ஒற்றுமை, மூன்றிலுமே நாய்கள் வருகின்றன. மூன்று மையக் கதாபாத்திரங்களும் தாங்கள் வளர்க்கும் நாய் மீது அன்புகாட்டுகிறார்கள், அந்த நாய்களே அவர்களுடைய பிரச்சினைகளுக்கும் காரண மாகின்றன. மூன்று கதாபாத் திரங்களும் ஒரு கட்டத்தில் சூழ்நிலைக் கைதிகளாக, தனித்து விடப்பட்டவர்களாக, அன்புக்காக ஏங்குப வர்களாக இருக்கிறார்கள் என்பதும் ஒரு ஒற்றுமை.

மேலும் ஒரு ஒற்றுமை, மூன்று கதாபாத்திரங்களும் முடிவில் தாங்கள் ஆசைப் பட்ட ஒன்று கையில்கிட்டா மல் நழுவிச் செல்வதைப் பார்த்தபடி கையறு நிலை யில் நிற்கிறார்கள் என்பதே. இயற்கை என்னும் பிரம் மாண்டத்தின் முன், சமூகம் எனும் சிக்கலான மாபெரும் வலைப்பின்னலின் முன் ஒவ்வொரு மனிதரும் கைவிடப்பட்டவரே என்பதே இந்தப் படத்திலிருந்து நான் புரிந்துகொண்டது.

(பட்டியல் தொடரும்)

---




கடலின் ஆழமான பகுதிக்குள் செல்லச் செல்ல அங்கு உயிரினங்கள் ஏதும் இருக்காது என்றே முதலில் கருதப்பட்டது. அதுவும் 3 கிலோமீற்றர் ஆழத்துக்குப் பிறகு எந்தக் கடல் வாழ் உயிரினமும் இருக்காது என்று உறுதியாக நம்பியிருந்தார்கள். ஆனால் இதில் உண்மையில்லை என்பது தெரிய வந்தது எப்படி?

கடலின் ஆழம் வரை இதுவரை இரண்டே பேர்கள்தான் (இந்த நூற்றாண்டுக்கு முன்பு) சென்று ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள்.

அதுவும் 53 ஆண்டுகளுக்கு முன்னர். 1960–ஆம் ஆண்டு, டாக்டர் ஜாக்குவெஸ் பிக்கார்ட் என்பவரும் டொன் வோல்ஷ் என்பவரும் சேர்ந்து ஒரு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பலில் கடலின் அடி ஆழம் வரை சென்று ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள்.

ஜாக்குவெஸ் ஸ்விட்சர்லாந்து நாட்டுக்காரர். கடல் ஆராய்ச்சி நிபுணர் மற்றும் என்ஜினியர். கடலுக்குள் செல்லும் வாகனங்களைக் கட்டுமானம் செய்வதில் வல்லவர். டொன் வோல்ஷ் என்பவர் அமெரிக்கர்.

அமெரிக்க கடற்படையின் உதவியுடன் பிக்கார்ட் தயாரித்த நீர்மூழ்கிக் கப்பல் மூலம்தான் இவர்கள் இருவரும் கடலின் ஆழம் வரை சென்று ஆராய்ச்சி நடத்தித்திரும்பி வந்தார்கள்.

இவர்கள் வட பசிபிக் கடலிலுள்ள மரியானாஸ் ட்ரென்ச் என்னுமிடத்தில் கடலின் தரை வரை சென்று வந்தார்கள். இவர்கள் சென்ற ஆழம் 10,916 மீற்றர்கள். 5 மணி நேரம் பயணித்து கடலின் தரையை அடைந்தார்கள். கடலின் அடியில் செல்லச் செல்ல நீரின் அழுத்தம் அதிகரிக்கும். இதனால் மூச்சு விடுவதுகூட மிகவும் சிரமமாக இருக்கும். கொஞ்ச நேரத்துக்கு மேல் அங்கு இருக்க முடியாது.

இவர்கள் சென்ற அந்தச் சிறிய கப்பல் நீரின் அழுத்தம் தாங்காமல் விரிசல்களுக்கு உள்ளானது.

அதனால் இவர்கள் உடனடியாக அங்கிருந்து கிளம்பி மீண்டும் கடலின் மேல்பகுதிக்கு வந்து நாட்டுக்குத் திரும்பினார்கள். இவர்கள் அந்த ஆழத்தில் இருந்த நேரம் 20 நிமிடங்கள் மட்டுமே!

கடலின் அடி ஆழத்தில் சிலவகை வினோத மீன்களைப் பார்த்ததாக இவர்கள் சொல்லியபோது யாரும் நம்பவில்லை. ஏனெனில் அவ்வளவு அழுத்தத்தில் எந்த உயிரினமும் உயிர்வாழ முடியாது என்றே அதுவரை கருதப்பட்டது.

அதன்பிறகு வெகுகாலம் வரை யாரும் கடலின் ஆழத்துக்குச் சென்று வர முயற்சிக்கவில்லை.

தற்போது ஆளில்லாத நீர்மூழ்கிக் கப்பல்கள் கடலின் தரைப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட ஆராய்ச்சியை நடத்தும் வசதி உலகில் 6 நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு மட்டுமே இருக்கின்றன.

இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிட் அட்டன் என்பவர் பி.பி.சி. செய்திச் சனலுக்காக கடலில் 14 ஆயிரம் அடி ஆழம் வரை சென்று கடல் உயிரினங்கள் பற்றி செய்திப்படம் ஒன்றைத் தயாரித்துள்ளார். இந்த ஆராய்ச்சிக்கும் கடலின் அடிப்பகுதியை புகைப்படம் எடுத்துக் கொண்டு வருவதற்கும் இவருக்கு 7 ஆண்டுகள் ஆகின.

இந்த ஆராய்ச்சியின் போது கடலில் தினமும் 10 உயிரினங்கள் தோன்றுவதை இவர் கண்டறிந்தார். மேலும் கடலிலுள்ள 85 சதவீத உயிரினங்களையும் படம்பிடித்துக் கொண்டும் வந்திருக்கிறார். இதுவரை யாரும் இந்த அளவுக்குக் கடல் உயிரினங்களைப் படம்பிடித்ததில்லை. இவரது ஆராய்ச்சிக்காக 110 கோடி ரூபா செலவானது என்கிறார்கள்.

கடலுக்கடியிலிருந்த எரிமலைப் பகுதி ஒன்றின் அருகில் இவர் கண்டறிந்த இரண்டு புதிய மீன் வகைகளில் ஒன்று 'டம்போ ஒக்டோபஸ்'. இது விநோதமான தோற்றத்துடன் உள்ளது. காது போன்று அமைப்பில் துடுப்புகளை வைத்துக் கொண்டு இது நீந்துகிறது.

மற்றொன்று 'ஆங்க்லர்' என்ற மீன். இது பார்க்கவே மிகவும் பயங்கரமாக இருக்கிறது.

இதன் வாயில் நீண்ட கோரைப் பற்கள் காணப்படுகின்றன. அன்ரெனா போன்ற நீண்டதொரு அமைப்பும் இதற்கு இருக்கிறது. இதன் மூலம் இது எதிரிகளை அடையாளம் கண்டு கொள்கிறதாம்.

இப்படி எத்தனை விநோதங்கள் கடலுக்குள்! இந்த ஆராய்ச்சி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மேலும் பல புதிய செய்திகள் விரைவில் கிடைக்கும்.

# புதிர்ப்போட்டி



நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

## புதிர்ப்போட்டி 39 இற்கான சரியான விடைகள்

1) இந்தியாவின் தேசிய மரம் சந்தனமரம்
2) செய்கோட்டை - இந்தியா
3) M.G.R. நடித்த 100 ஆவது படம் ஒளிவிளக்கு
4) இயக்குநர் இமயம் - K.பாலச்சந்தர்
5) இயக்குநர் சிகரம் - K.பாரதிராஜா

1) மிக ஆழமான சமுத்திரம் எது? பசுபிக்
2) அமெரிக்காக் கண்டத்தை கண்டு பிடித்தவர் யார்? கிறிஸ்தோபர் கொலம்பஸ்
3) கண்டமாகவும், சமுத்திரமாகவும் உள்ளது எது? அந்தாட்டிகா
4) உலகில் மிகச் சிறிய சமுத்திரம் எது? ஆக்டிக் சமுத்திரம்
5) குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம் எது? அவுஸ்ரேலியாக் கண்டம்

## புதிர்ப்போட்டி 39 இல் வெற்றியீட்டியோர் விபரம்



பெயர்: ய.தேவகீர்த்தனா
பாடசாலை: யாழ். நெடுந்தீவு மகா வித்தி.



பெயர்: ராஜ்குமார் சுமித்தா
பாடசாலை: யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி



பெயர்: இ.பிரியதர்சினி
பாடசாலை: உடுவில் மகளிர் கல்லூரி.



பெயர்: த.மதுஷா
பாடசாலை: யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.



பெயர்: கு.ஜெயராமன்
பாடசாலை: யா/ மத்திய கல்லூரி.

## புதிர்ப்போட்டி 39 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

| | |
|---|---|
| பெயர்: ரா.சஸ்மிதா<br>பாடசாலை: யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி. | பெயர்: க.தினேஸ்<br>பாடசாலை: யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி. |
| பெயர்: பா.சாருணி<br>பாடசாலை: யா/ வேம்படி மகளிர் பாடசாலை | பெயர்: செ.அபிமன்<br>பாடசாலை: யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி |
| பெயர்: கே.கோகிலவாணி<br>பாடசாலை: யா/ செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை | பெயர்: யோன்சன் ஏரன் டேவிஸ்<br>பாடசாலை: யா/ பரியோவான் கல்லூரி |
| பெயர்: பி.மேசிலோட்<br>பாடசாலை: யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி | பெயர்: து.கோகுலன்<br>பாடசாலை: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி |
| பெயர்: ய.தேவகீர்த்தனா<br>பாடசாலை: நெடுந்தீவு மகா வித்தியாலயம். | |

**சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது**

புதிர்ப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை 27.04.2013 தொடரும்.

## புதிர்ப்போட்டி 40 இற்கான சரியான விடைகள்

1) முதல் தமிழ் அகராதியைத் தொகுத்தவர் யார்? சாமுவேல் ஜோன்சன்
2) முதல் சிங்கள அகராதியைத் தொகுத்தவர் யார்? சோரட்டதேரர்
3) தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர் யார்? வ.சு.வே.ஐயர்
4) உலகின் முதல் சிறுகதை ஆசிரியர் யார்? சுவாமி விபுலானந்தர்
5) இலங்கையில் தமிழில் வெளியான முதலாவது நாவல் எது? அஸன் பெயுடைய சரித்திரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | ஞ் | 2 ச | ன | ம் | ■ | 3 மே |
| டி | ■ | கா | ■ | ■ | ■ | ட |
| 4 சி | லை | ■ | 5 வா | க | ன | ம் |
| ல் | ■ | 6 ஆ | ■ | ■ | ■ | ■ |
| ■ | 8 க | ணை | ■ | 7 ஆ | 9 க | ரி |
| சி | ■ | ■ | 10 ந | க | ல் | ■ |
| 11 ப | னை | ■ | தி | ழி | 12 வி | ரை |

## புதிர்ப்போட்டி 40 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

| |
|---|
| பெயர்: உ.டிலக்ஷனா<br>பாடசாலை: யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி. |
| பெயர்: சி.தயாளினி<br>பாடசாலை: யா/ அத்தியர் இந்துக் கல்லூரி. |
| பெயர்: த.யுவந்தன்<br>பாடசாலை: கி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம். |
| பெயர்: ஸ்ரீ.சஞ்சுதன்<br>பாடசாலை: யா/ இந்துக் கல்லூரி. |
| பெயர்: கு.பிரியதர்சா<br>பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. |
| பெயர்: சு.விமலேசன்<br>பாடசாலை: யா/ ஹாட்லிக் கல்லூரி. |
| பெயர்: த. இளங்கோ<br>பாடசாலை: கி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம். |
| பெயர்: ய.தேவகீர்த்தனா<br>பாடசாலை: யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம். |
| பெயர்: மெ.இங்கிதை<br>பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை |

## புதிர்ப்போட்டி 40 இல் வெற்றியீட்டியோர்



பெயர்: ஆ.கீர்த்தனா
பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்: க.அபிராமி
பாடசாலை: யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



பெயர்: கி.டிசாயினி
பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



பெயர்: ப.தேவகீர்த்தனா
பாடசாலை: யாழ். நெடுந்தீவு மகா வித்தி.



பெயர்: இ.பிரியதர்சினி
பாடசாலை: யா/ உடுவில் மகளிர் கல்லூரி.

# கைதடி, நாவற்குழி சந்தியில் சுற்றுவட்டப்பாதை அமைப்பு



(கல்வயல்)

ஏ.9 பிரதான வீதியில் கைதடி மற்றும் நாவற்குழி சந்திப் பகுதிக்கான சுற்றுவட்டப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதிகள் இணையும் கைதடி மற்றும் நாவற்குழி வீதிகளில் சுற்றுவட்டப்பாதை அமைக்கப்படாமல் பயணங்களை மேற்கொள்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுவந்தனர். அத்துடன் இவ்வீதி காப்பெற் இடப்பட்டு சில காலங்களாக சுற்றுவட்டப்பாதை இன்றி மக்கள் இவ்வாறு இன்னல்களை எதிர்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மக்களின் போக்குவரத்து தேவையைக் கருத்திற் கொண்டு சுற்றுவட்டப் பாதை மிகசிறப்பாகக் கட்டப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்து மிக இலகுவாக்கப்பட்டுள்ளது.

மேலும் வாகனப்போக்குவரத்துக்களும் இதனால் இலகுவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் வாகன சாரதிகளும், மக்களும் சுற்றுவட்டப்பாதை அமைத்த அதிகார சபையினருக்கு நன்றிகளை தெரிவித்துள்ளனர். (43)

# காரசாரமான முறையில் நடந்தது கரவெட்டி பிரதேசசபைக் கூட்டம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் கடந்த புதன்கிழமை சபைத் தவிசாளர் வியாகேசு தலைமையில் நடைபெற்றதுடன் கூட்டம் காரசாரமான முறையில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் கடந்த மாத கூட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இவ் அறிக்கையில் அரசியல் ரீதியான கருத்துக்களை ஆளும் கட்சி உறுப்பினர் ஆ. மதியரசன் பேச முற்பட்டவேளை ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் அரசியற் கருத்துக்களை சபையில் குறைக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

அதற்கு மதியரசன் நாங்கள் அரசியற் கருத்துக்களை பேசுவதற்காகவே மக்களால் தெரிவு செய்யப்பட்டோம் எனக் கூறியதற்கு மேலும், உறுப்பினர்கள் எதிர்புத் தெரிவிக்க 2 மணித்தியாலம் சலசலப்பாக சபை இருந்தது. எனினும் தவிசாளர் கூட்ட அறிக்கையில் அரசியல் பேச முடியும் எனத்தெரிவித்ததைத் தொடர்ந்து கூட்டம் நடத்த முடியாமல் உறுப்பினர்களால் கேள்வி கேட்கப்பட்டது. பின்னர் சுமுகமாக கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து தவிசாளர் கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்கிறீர்கள் ஆனால், சபையில் வீரவசனம் பேசுகின்றீர்களே இது சரியா? எனக் கேள்வியெழுப்பினார். அதற்கு உறுப்பினர்கள் தங்களை கிராம மக்கள் அழைப்பதனால் செல்கிறோம் என்றனர்.

இதற்கு தவிசாளர் இதனைப் போல சபைக் கூட்டங்களிலும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறித்து தீர்மானிக்க முன்வருமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், இக்கூட்டத்தில் வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன. அத்துடன் இக்கூட்டம்காரசாரமான விவாத மேடையாகக்காணப் பட்டதால் தவிசாளர் கூட்டத்தை நடத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இக் கூட்டத்தில் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டமைப்பு உறுப்பினர்களின் செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த பொதுக் கூட்டமும் சிததிரைப்புத்தாண்டு சிறப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சங்க உறுப்பினர்களைத்தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ந. கனகலிங்கம் அறிவித்துள்ளார்.

# புதிய நிர்வாகத்தெரிவு இல்லை; செயற்பாடுகள் பின்தங்கிய நிலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கணுக்கேணி மேற்கு கிராமத்தில் செய்ற்படும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இதுவரை இடம்பெறாமையால் கிராமத்தின் செயற்பாடுகள் பின்தங்கிய நிலையிற் காணப் படுவதாகக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தில் உள்ள மக்கள் யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறி மூன்றரை வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இதுவரை இச்சங்கத்திற்கு புதிய நிர்வாகம் ஏற்படுத்தப்படவில்லை எனவும், இக்கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு சிறப்பான முறையில் செயற்பட்டு வருவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இக்கிராம அபிவிருத்தி சங்கத்தின் புதிய நிர்வாகம் யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியிலும், புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படாமல் 15 வருடங்களாக ஒரே நிர்வாகமே செயற பட்டு வருவதாகவும் இதனால் இச்சங்கத்தின் செயற்பாடுகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றங்கள் எவையும் எட்டப்படவில்லை எனவும் மக்கள், தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தின் அபிவிருத்தி மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கம் முழுக்கவனமும் செலுத்தி தீர்வினை பெற்றுக் கொடுக்கின்ற நிலையில் இக்கிராமத்தில் அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை எனத் தெரிவிக்கும் இக்கிராம மக்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகம் அவசியம் தெரிவு செய்யப்படவேண்டும் எனவும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# பூநகரி கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(முழங்காவில்)

பூநகரி கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட தமிழ்மொழித்தினப் போட்டிமுடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு. (நேற்றைய தொடர்ச்சி)

பாவோதல் பிரிவு 3

சு.குபேசாந் (முழங்காவில் ம.வி.), ம.சிந்துஜா (பூநகரி ம.வி.), சௌ.தமிழினி (செல்லியாதீவு அ.த.க.பா.)

பிரிவு 4

ச.மேனகா (முழங்காவில் ம.வி.), த.தனுசியா (நல்லூர் ம.வி.), ஈ.கீர்த்திகா (பூநகரி ம.வி.)

பிரிவு 5

வி.சிந்தாதேவி (கறுக்காய்தீவு ம.வி.), ஜெ.விதுஜா (முழங்காவில் ம.வி.), மு.பிரியந்தினி (முழங்காவில் ம.வி.)

ஆக்கத்திறன் பிரிவு 1

ம.லக்சனா (முழங்காவில் ஆரம்ப வி.), பி.கயேந்தினி (வினாசியோடை அ.த.க.பா), ச.சரண்ராஜ் (ஞானிமடம் அ.த.க.பா)

இசையும் அசைவும் பிரிவு 1

ச.யதுசன் (பரமன்கிராய் அ.த.க.பா), கொ.டனுசா (சுன்னாவில் அ.த.க.பா), மெ.மேரிரணிலா (நாச்சிக்குடா அ.த.க.பா)

பேச்சு பிரிவு 3

ம.சீராளன் (பூநகரி ம.வி.), வ.அன்பரசன் (ஞானிமடம் அ.த.க.பா), த.நிரோஜினி (செல்லியாதீவு அ.த.க.பா).

பிரிவு 4

க.கயலரசி (நல்லூர் ம.வி.), ம.சிந்துயா (பூநகரி ம.வி.), ஜெ.ரம்மியா (முழங்காவில் ம.வி.)

பிரிவு 5

அ.அலன் (முழங்காவில் ம.வி.), க.சஜீபன் (பூநகரி ம.வி.)

இசை தனி பிரிவு 1

ஜே.அமலரோஸ் (இரணைதீவு றோ.க.), த.தமிழ்மாறன் (செல்லியாதீவு அ.த.க.பா), சி.திவ்யா (முழங்காவில் ம.வி.)

பிரிவு 2

அ.பௌஞ்சிகா (நாச்சிக்குடா அ.த.க.பா.), அ.சரண்யா (முட்கொம்பன் அ.த.க.பா), இ.மதுசாளினி (முழங்காவில் ம.வி.)

பிரிவு 3

ஜே.தர்சி (நாச்சிக்குடா அ.த.க.பா), ஏ.ஜனனி (முழங்காவில் ம.வி), ச.மயூரி (நல்லூர் ம.வி.)

நடனம் தனி பிரிவு 1

ந.பிரிந்தா (ஜெயபுரம் ம.வி.), த.நிலாமதி (நல்லூர் ம.வி.),ஜெ.தர்மனி (ஞானிமடம் அ.த.க.பா)

பிரிவு 2

சு.தமிழரசி (நல்லூர் ம.வி.), வி.கௌதமி (ஜெயபுரம் ம.வி), பா.டயானி (ஞானிமடம் அ.த.க.பா), ந.விதுசா (வேரவில் ம.வி.)


பிரிவு 3

கி.கௌரி (இரணைதீவு றோ.க.), அ.மகிழினி (ஜெயபுரம்.ம.வி.), த.தனுசியா (செல்லியாதீவு அ.த.க.பா)

பிரிவு 4

சி.கஜிந்தா (பூநகரி ம.வி) (112) (தொடரும்...)

## பரமர் சங்கமம்



'தனக்கொரு நீதி மற்றவர்க்கொரு நீதி' இதுதானை உலகம் தோன்றிய காலநதொட்டு நடைமுறையில் இருந்து வாற நீதி முறை.

சர்வசாதாரணிகளில் இருந்து பெரிய நிர்வாக அலகுகளிலும் இந் நிலைதான். யாழ்.மாநகர சபை பொதுச சுகாதாரப் பிரிவினர் தற்காலச் சூழலில் நடைமுறைப் படுத்திவரும் ஒழுங்குமுறை வரவேற்கத்தக்க ஒன்று.

அதனால் பலபேர் வர்த்தக ரீதியில் ஒன்று கூடும் இடங்களில் சுகாதாரச் சீர்கோடுகள் ஏற்படாமல் தவிர்க்க முடிந்துள்ளது. தேனீர்க் கடைகள் வருடத்திற்கு இரண்டு தடவை பெயின்ற்.வெள்ளை பூசித் சுத்திகரிக்க வேண்டும்.

பார்சல் கட்டுவதற்கு என்றில்லாமல் கைதுடைக்கவும் பாவிக்கும் பேப்பர் அச்சடித்ததாக இல்லாமல் வெள்ளைத்தாளையே பாவிக்க வேண்டும்.

இன்னும் நிலங்கள் செரமிக் பதித்து துப்புரவாக இருத்தல், தேனீர்ப் பட்டடை மற்றும் பேசன்கள் நாளொன்றில் பலதடவை மினுக்கித் துப்புரவாகப் பளிச்செண்டு இருக்க வேண்டும் இல்லையேல் உடனடியாகக் குற்றப் பணம் அறவிடப்படும்.

யாழ்.தட்டாதெரு சந்தி சைவக்கடை ஆறாயிரம் ரூபா தண்டம் செலுத்தியதாக அறிய முடிகிறது. அதுவும் இல்லாமல் கடைவாசல்களில் கடதாசி கிடந்தால் கூடக் குற்றம்.

இந்நெருக்கடிகளைக் கடைக்காரர்களுக்குக் கொடுப்பதால் காசு பாக்கக் கூடிய பலாபலனும் கிடைத்து விடும். எதுவாயினும் ஒருகண் மூடிக் கொண்டு மறுகண்ணைத் திறக்கும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கதல்ல.

தனியார் நடத்தும் தேனீர்கடைகளைப் பூதக் கண்ணாடி போட்டு பார்க்கும் பொதுச்சுகாதார அதிகாரிகள் தாம்சார்ந்த நிறுவனங்களால் நடாத்தப்படும் கடைகளை எட்டிப் பார்ப்பதுகூட இல்லையா?

கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்துக்குச் சென்றதால் அயலில் உள்ள தேனீர்கடை ஒன்றில் நுழைந்தேன். யாழ்.மாநகர சபை வளாக எல்லையோடு மாநகர சபை நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ள தேனீர்சாலை சுகாதாரம் மருந்துக்குக் கூட காணப்படவில்லை. ஒரு நபரே பரிமாறவும் தேனீர் தயாரிக்கவும் நின்றார்.

ஆசனங்கள், நிலம் அத்தனையும் பார்க்க மனம் கூசுமளவுக்கு சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்டது. கைகழுவ தேனீர்பட்டறை அறைக்குள் சென்றால் இருவர் புகைத்தலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

பேஷன் கழுவி ஒருமாத காலமாவது இருக்கும். அதனில் இருந்து ஒருவகை நெடி பரவியது. புகைத்துக் கொண்டிருந்தவர்கள் அடிக்கடி துப்பிக்கொண்டிருந்தனர். கைதுடைக்கவோ பொதி கட்டவோ வெள்ளைத்தாள் பாவனையில் இருக்கவில்லை.

சுகாதாரப் பரிசோதகர்கள் இருந்து பணிக்கு வெளிக்கிடும் யாழ். மாநகர சபை வளாகத்துள் இயங்கும் மேற்படி தேனீர்சாலையைய அவர்கள் ஏன் இப்படி இருக்க விட்டுள்ளனர்?

'தனக்குத் தனக்கெண்டால் நெஞ்சு படக்குப் படக்கெண்ணுமாம' யாழ். பலநோக்குக் கூட்டுறவு உணவகத்திலும் இன்னமும் வெள்ளைப் பேப்பர் பாவனைக்கு வரவில்லை. இதுகளால் ரெண்டு காசை அவர்களால் பாக்க முடியாததுதான் காரணமோ இல்லையே பின்னை நான் சொல்லுறே...

# விவசாய அமைச்சு தலைமையகம் கிளிநொச்சியில் அமையவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவசாயிகளுக்கான செயற்பாடுகளை மையப்படுத்திய மாவட்டம். இதனால் இங்கு தேவைகள் அதிகமாக உள்ளது. எனவே வடமாகாண விவசாய அமைச்சின் தலைமையகம் கிளிநொச்சியிலேயே இயங்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.



வடமாகாண விவசாய அமைச்சும் விவசாயத் திணைக்களமும் இணைந்து மேற்கொண்ட நவீன பயிர்ச்செய்கை முறைகளை அறிமுகப்படுத்தும் வயல் விழா நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி விவசாய பயிற்சிப் பண்ணையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம். இங்கு வாழ்கின்ற மக்களில் பெரும்பான்மையானவர்கள் விவசாயத்தை மட்டுமே ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள் எனவே விவசாயத்தை மூலதனமாகக் கொண்டு இயங்கும் இம்மாவட்டத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட விவசாய உற்பத்தி முறைகளை அறிமுகப்படுத்தி அதனூடாக விவசாயிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

அதன் ஆரம்பகட்டமாக இவ் வயல்விழா அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது. இதேவேளை இவ்வருட இறுதிக்குள் மாபெரும் விவசாயக் கண்காட்சி ஒன்றினை நடாத்துவதற்கும் வடமாகாண சபை ஏற்பாடு செய்துள்ளது" என்றார்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண பிரதமசெயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், விவசாய, கால்நடை மீன்பிடி நீர்ப்பாசன மற்றும் காணி அமைச்சின் வடமாகாண செயலாளர் கால்டின், வடமாகாண கால்நடை உற்பத்திப் பணிப்பாளர் வசீகரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# பதிவு செய்யாத சிறுவர் இல்லங்கள் வடக்கில் மூடுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

வடமாகாணத்தில் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடமாகாண சிறுவர் பராமரிப்பு நன்னடத்தைத் திணைக்களத்தின் ஆணையாளர் தங்கவேல் உமா தெரிவித்தார். இலங்கையில் 352 சிறுவர் இல்லங்கள் செயற்பட்டு வருவதாகவும், வடக்கில் மட்டும் 78 சிறுவர் இல்லங்கள் தற்போது உள்ளது என்றும், 4000 சிறுவர்கள் இச் சிறுவர் இல்லங்களில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள சிறுவர் இல்லங்களில் 80 வீதமானவை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் 20 வீதமானவை பதிவு செய்யாமல் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பதிவு செய்யாமல் செயற்படும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கான நடவடிக்கைக்ளை சிறுவர் பராமிரிப்பு நன்னடத்தைத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. தற்போது பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களை பாடசாலைகளில் இடமாற்றுவதில் உள்ள பிரச்சினை கவனத்தில் எடுக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுநீரக நோய் அதிகரிப்பிற்கு

# தாகத்தை உணராத அநுராதபுர மக்கள்

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் 90 சதவீதமான மக்கள் தாகத்தை உணர்வதில்லையென்ற அதிர்ச்சிகரத் தகவல் ஊடகங்கள் சிலவற்றில் வெளியாகியுள்ளது. அம்மாவட்டத்தில் மக்கள் சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்படுகின்றமை அதிகரித்து வருவது தொடர்பில் வைத்தியர்கள் ஆராய்ந்த போது தாகத்தை உணராமை தொடர்பான தகவலும் வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ்விடயம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்டு வரும் வைத்தியர்களும் தங்களுக்கு தாகம் எடுக்கவில்லை. என்ற தகவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இந்திய கடற்பரப்பிற்குள் சென்ற இரண்டு மீனவர்களும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இந்திய கடற்பரப்பிற்குள் திசைமாறிச் சென்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரண்டு மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் வ.அருள்தாஸ் தெரிவித்தார். இந்திய கோஸ்ட்கார்ட் பொலிஸார் இவர்களை விடுதலை செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறை கடற் பகுதியில் இருந்து கடந்த 26ஆம் திகதி கடற்றொழிலுக்குப் படகில் சென்ற இரு மீனவர்களும் திசைமாறி இந்தியக் கடற்பரப்பிற்குள் சென்றுள்ளனர். அவர்கள் இருவரையும் இந்தியக் கடற்படையினர் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்திருந்தனர்.

இந்த மீனவர்களின் விடுதலை தொடர்பாக வல்வெட்டித்துறை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர் யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டது. இந்த அறிவித்தலின் பிரகாரம் நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் அமைச்சர் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இருவரும் விடுதலை செய்யப்பட்டதாக பருத்தித்துறை கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் மேலும் கூறினார். (25)

# இறுதிக்கட்டத்தில் கண்ணிவெடி அகற்றல்

(கொழும்பு)

96 சதுர கிலோ மீற்றர் பரப்பில் மட்டுமே நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது, யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றி வந்த பல்வேறு நிறுவனங்கள் குறித்த பிரதேசத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. சர்வாட்ரா, ஹொரிசோன் மற்றும் எம்.எம்.ஐ.பீ.ஈ போன்ற நிறுவனங்கள் ஏற்கனவே பணிகளை முடித்துக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எடுத்துக் கொள்ளப்பட்ட இலக்குகள் முடிவடைந்ததன் பின்னர் பணிகளை முடிவுறுத்திக்கொள்வது வழமையான நிகழ்வே என பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

கண்ணிவெடி அகற்றப்பட வேண்டிய நிலப்பரப்பு மற்றும் நிதி உதவிகளின் அடிப்படையில் பணிகள் குறைக்கப்படுவது உலகின் எல்லா நாடுகளுக்கும் பொதுவானது என தெரிவித்துள்ளது.

இராணுவ பொறியியல் பிரிவு மிகச் சிறந்த முறையில் நிலக் கண்ணிவெடியகற்றும் பணிகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

வெகு விரைவில் முற்று முழுதாக நிலக்கண்ணிவெடிகளை அகற்றமுடியும் என அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# தரம் 6 - 10 வகுப்புக்களுக்கு 2015 முதல் புதிய பாடத்திட்டம்

(கொழும்பு)

தரம் 6 முதல் 10 வரையிலான பாடத்திட்டத்தை 2015 ஆம் ஆண்டுமுதல் மாற்றம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எட்டாம் தரத்திற்குப் பின்னர் மேற்கொள்கின்ற பாடத்திட்ட திருத்தத்திற்கு புதிதாக 70- 75 வரையிலான புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் கலாநிதி திஸ்ஸ ஹேவாவிதாரன தெரிவித்தார்.

அடுத்த வாரம்முதல் புதிய பாடப்புத்தகங்கள் எழுதும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அதற்காக தேசிய கல்வி நிறுவகம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட பலர் பங்களிப்புச் செய்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

அவ்வாறே பாடப்புத்தகங்களை எழுதியதன் பின்னர் அது குழுவொன்றிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் அது தொடர்பான குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளதாகவும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் கூறினார்.

புதிய பாடத்திட்டத்திற்கேற்ப தயாரிக்கப்படும் புதிய பாடநூலில் 2014ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பவுள்ளதாகவும் அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் வலியுறுத்தினார்.

# மின் கட்டண உயர்வு தவிர்க்க முடியாத ஒன்று

## கூறுகிறார் அமைச்சர் கெஹலிய



அனைவருக்கும் மின்சாரம் என்ற திட்டம் சகல கிராமங்களிலும் அமுல்படுத்தப் படுவதாலும் நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்படாத காரணத்தினாலும் மின் கட்டண உயர்வைத் தவிர்க்க முடியாதுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடந்தவேளை ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டின் தேவைக்கு ஏற்ப மின் உற்பத்தி நடைபெறாத நாடுகளில் மின்சார வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. ஆனால இலங்கையில் மின்வெட்டு இல்லை.


35 சதவீத நீர் மின்சார உற்பத்தியை இலங்கை மின்சார சபை எதிர்பார்த்தது. ஆனால் 16 சதவீத நீர் மின்சாரமே இப்போது கிடைக்கின்றது. அனல் மின் நிலையங்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதால் பாரிய செலவு ஏற்படுவதால் நிலக்கரி மின் உற்பத்தி மற்றும் காற்றாடி மின் உற்பத்திகளை ஊக்குவிக்க அரசு கவனம் செலுத்திவருகின்றது. இந்தக் கட்டண உயர்வு மாற்ற முடியாததொரு தீர்மானமல்ல. சாதகமான ஒரு நிலை உருவாகினால் கட்டணங்கள் மறுசீரமைக்கப்பட இடமுண்டு என்றும் அமைச்சர் கூறினார்.

# செட்டிகுளத்தில் 41பேருக்கு தற்செயல் நிவாரணம்

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் தற செயல் அனர்த்தங்களால் பாதிப்படைந்த 41 பேருக்கு நிவாரணக கொடுப்பனவுகள் வழங்குவதற்கு நிதி கிடைக்கப் பெற்றுள்ளது என வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆண்டு தற்செயல் அனர்த்தத்தால் பாதிப படைந்தவர்களின் நிவாரணமாக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் 36 பேருக்கு தலா 10,000 ரூபா வீதமும் நான்கு பேருக்கு தலா 9,000 ரூபா வீதமும் ஒருவருக்கு 8,000 ரூபாவும் நிதியுதவி வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இந்த நிவாரணங்களுக்கு பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் செட்டிகுளம் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் செல்வி ரீ.நந்தினியை தொடர்பு கொண்டு உரிய கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றார். (160)



# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2013

# கல்வி முரசு O/L

## கணிதம் - பகுதி I




ஆசிரியர்:
S.T.ஜனார்த்தனன்
B.sc

## பகுதி - A

1. ரூபா 78 விலையான தொப்பி ஒன்று வாங்கிய மாணவன் கடைக்காரனுக்கு எவ்வளவு பணம் கொடுத்தால் மீதியாக ரூபா 22 கிடைக்கும்.

2. 2.5 m ஐ cm இல் தருக.

3. உருவில் a இன் பெறுமானம் யாது.





4. தீர்க்க. $\frac{6}{X}=2$

5. கழிக்க. $1101_{இ} - 101_{இ}$

6. சுருக்குக. $(-0.2)^3$

7. அடைப்பு நீக்கிச் சுருக்குக. 7-2(X+3)

8. உருவில் $A \cap B$ என்ற பகுதியை நிழற்றுக.





9. 10,15,15,20,25,30,35 என்ற புள்ளிகளின் இடையம் யாது?

10. $\begin{pmatrix} 3 & 2 & 0 \\ 0 & -1 & -2 \\ 1 & 4 & 1 \end{pmatrix}$ தாயவரிசை தருக? எவ்வகைத் தாயம் எனத் தருக.


11. ஒரு நோயாளிக்கு மூன்று விதமான மருந்துவில்லைகள் கொடுக்கப்பட்டன. ஒன்று 20 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மற்றையது 25 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மூன்றாவது வில்லை 30 நிமிடத்துக்கு ஒரு தடவையும் உட்கொள்ள வேண்டும். காலை 8 மணிக்கு 3 விதமான மருந்து வில்லைகள் உட்கொண்டால் மீண்டும் எந்த நேரத்தில் மூன்றும் ஒன்றாக உட்கொள்ள வேண்டும்?

12. ஒரு நிமிடத்தில் 120 m தூரம் செல்லும் ஒரு வாகனம் ஒரு மணித்தியாலத்தில் எத்தனை km தூரம் செல்லும்.

13. நாற்பக்கல் ABCD இல் X இன் பெறுமானம் யாது?





14. உருவில் $PQ \parallel SR$ ஆகும். PQRS ஒரு வட்டநாற்பக்கல் x, y இன் பெறுமானம் காண்க.




15. $x \leq -3$ உம் $x > 2$ என்ற சமனிலியை எண் கோட்டில் வரைக. $x > 2$ இல் நிறை எண்கள் இரண்டு தருக.

16. ABCD ஓர்நாற்பக்கல் $AD \parallel BC$ ஆகும். AC, BC என்பன O இல் இடைவெட்டுகின்றன.
அ) முக்கோணம் BCD இற்கு சமமான முக்கோணி எது?
ஆ) OCD முக்கோணிக்கு சமபரப்பான முக்கோணி எது?




17. ரூபா 85000 இற்கு ரூபா 8.50 விலைப்படி எத்தனை 10 ரூபாய் பங்குகள் வாங்கலாம்? பங்குகளின் மொத்தப் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?

18. 2x + 3y = 10 என்ற நேர்கோட்டில் கீழே தரப்பட்ட எந்த ஆள்கூறுகள் தரப்பட்ட நேர்கோட்டில் அமைந்திருக்கும். $A\left(\frac{1}{2},3\right)$ $B(1,-3)$ $C(-1,4)$


19. $\frac{2}{3}$, 2,6 ….. பெருக்கல் விருத்தியில்
அ) பொதுவிகிதம் என்ன?
ஆ) n ஆம் உறுப்பை முதன்மை எண்களின் பெருக்கத்தின் சுட்டியாக எளிய வடிவில் தருக?

20. $S=\frac{n}{2}(a+l)$ ஆனது ஒரு கூட்டல் விருத்தியில் n ஆம் உறுப்புகளின் கூட்டுத் தொகை யாகும். a ஐ எழுவாயாக மாற்றுக?


21. 8 மனிதர் ஒரு வேலையை 7 மணித்தியாலத்தில் செய்து முடிப்பர்.
அ) இவ்வேலை எத்தனை மனித மணித்தியாலங்கள் ஆகும்?
ஆ) அந்த 8 மனிதர்களும் அவ்வேலையை ஆரம்பித்து $2\frac{1}{2}$ மணித்தியாலங்களின் பின்னர் மின்தடை காரணமாக வேலை நிறுத்தப்பட்டது. அப்போது எத்தனை மனி-மணித்தியாலம் வேலை செய்யபபடாமை இருந்தது.

22. மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தாது தீர்க்க. $\log\frac{12}{5}+2\log x = lg60$


23. ஒரு வட்டத்தில் AB, DC என்ற இரு நாண்கள் X ஐ இடைவெட்டுகின்றன. AX=12 cm, CX=8cm, AD=15cm ஆகும். BC இன் நீளம் யாது?





24. உருளை திண்மமொன்றின் விட்டம் 2r உம், உயரம் 3r உம் ஆகும். இரு வட்டப்பரப்புக்கும் வளைபரப்புக்கும் உள்ள விகிதம் எளிய வடிவில் தருக. (உருளையின் வளை பரப்பு $2\pi rh$ )




25. A,B என்பன வட்டங்களின் மையங்கள் ஆகும். AC, BC வட்டங்களின் தொடலிகள் ஆகும்.
1) கோணம் ACB இன் பருமன் யாது?
2) $AC = 4\sqrt{2}cm$, $BC = 2cm$ எனின் AB இன் நீளம் என்ன?





26. உருவில் A இற்கு வடக்கே 15 km தூரத்தில் B யும் மேற்கே 15km தூரத்தில் P யும் உள்ளது.
அ) தரவுகளைப் படத்தில் குறிக்க?
ஆ) B இல் இருந்து P இன் திசைகோள் யாது?




27. இருபடிச் சமன்பாடு தீர்க்க. $6x^2-3x=0$

28. 1) AB என்பது காணியின் ஒரு எல்லையாகும்.
I) O இல் இருந்து 7m தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை பருமட்டாக வரைக?





29. ஒரு சதுரத்தில் 3,3,2,5 என்ற இலக்கம் எழுதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 3 | 5 |
| 2 | 3 |

அ) தீபன் எழுமாறாக 3 என்ற இலக்கம் தொடுகிறான். அவன் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?
ஆ) தீபன் தொடும் சில நிமிட நேரத்தில் ராஜியும் வேறு ஒரு இலக்கம் தொடுகிறார். இருவரும் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?

30. அ) $1\frac{1}{2}l$ குளிர்பானத்தை 75ml கொண்ட் குவளை. எத்தனை பாவித்து முற்றாக நிரப்பலாம்?
ஆ) குவளையின் கொள்ளளவு $1\frac{1}{2}l$ குளிர்பானத்தின் கொள்ளளவின் எத்தனை சதவீதமாகும்?





## பகுதி - B

01. சப்பாத்து சோடி ஒன்றின் உற்பத்தியில் மூலப்பொருளுக்கும் கூலிக்கும் உள்ள விகிதம் 2.3 ஆகும். ஒரு சோடி சப்பாத்து உற்பத்தி செய்ய ரூபா 2000 செலவாகின்றது. உற்பத்தியாளன் 40% இலாபம் வைத்து விற்கின்றான்.
1. மூலப்பொருள் செலவு யாது? கூலிச்செலவு யாது?
2. உற்பத்தியாளன் அச்சோடிச் சப்பாத்தை விற்றவிலை யாது?
3. மூலப்பொருள் 45% ஆலும் கூலிச் செலவு 10% ஆலும் அதிகரித்தால்
I) புதிய மூலப்பொருள் செலவு யாது?
II) புதிய கூலிச் செலவு யாது?
4. புதிய உற்பத்திச் செலவு யாது?
5. பழைய சதவீத இலாபம் பெற என்ன விலைக்கு விற்க வேண்டும்?

02. ஒருவன் தனது பயணத்தின் 3/5 பங்கை புகைவண்டியிலும் எஞ்சியதில் 1/3 பங்கை பஸ்வண்டியிலும் மிகுதியை நடந்தும் பயணம் செய்தான்.
அ) புகை வண்டியில் பயணம் செய்தபின் இன்னும் எவ்வளவு பங்கு பயணம் செய்ய உள்ளது?
ஆ) புகைவண்டி, பஸ்வண்டியில் பயணம் செய்த மொத்தப் பங்கு யாது?
இ) நடந்து செல்வதற்கு முழுவதன் என்ன பங்கு மிகுதியாக உள்ளது?
ஈ) நடந்து சென்ற தூரம் 8km எனின் பயணத்தின் மொத்தத் தூரம் யாது?
உ) நடந்து சென்ற தூரம் முழுப் பயணத்தின் என்ன சதவீதம்?


03. ஒரு பாடசாலையில் உள்ள க.பொ.த (சாதாரணதரம்) வகுப்பில் உள்ள மாணவர் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி பார்ப்பது தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.




A- நாடகம்
B- நடனம்
C- சினிமாப்படங்கள்


1. நாடகம், நடனம் மட்டும் பார்ப்போர் பகுதியை நிழற்றுக?
2. சினிமாப்படங்கள் பார்ப்போர் எத்தனைபேர்?
3. நாடகம் பார்ப்போர் 32 பேர் எனின் நாடகம் நடனம் மட்டும் பார்ப்போர் எத்தனை பேர்?
4. குறைந்தபட்சம் இரு நிகழ்ச்சியாவது பார்ப்போர் எத்தனை பேர்?
5. வகுப்பில் உள்ள மாணவர் தொகை 75 பேர் எனின் தரப்பட்ட ஒரு நிகழ்ச்சியினையும் பார்க்காதோர் நிகழ்வு யாது?

04. ஒரு பாடசாலை நுழைவாயிலில் ஒரு அலங்கார முகப்பு இரும்புக் கம்பிகளினால் ஆக்கப்பட்டுள்ளது. AP = BQ = 6m உம் PQ = 13m உம் AD = BC = 8m உம் DR = CT = 3m உம் RS = 5m உம் ஆகும்.




1. அரைவட்டமொன்றின் விட்டம் என்ன?
2. பைதகரசின் தேற்றத்தின்படி DP இன் நீளம் என்ன?
3. நிழற்றிய பகுதியின் சுற்றளவு?
4. நிழற்றிய பகுதிக்கு மின்வயர் மூலம் நிற மின்குமிழ்கள் 6m இற்கு ஒரு மின் குமிழாக எத்தனை மின்குமிழ்கள் பொருத்த வேண்டும்?
5. நிறம் தீட்டிய பகுதியின் பரப்பு யாது?

05. மாணவர் குழு ஒன்று கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளை வலையுரு வரையம் ஒன்று காட்டுகிறது.




அ) ஆயிடை 10-30 இல் எத்தனை மாணவர்கள் வகை குறிக்கப்படுகிறது?
ஆ) இவ்வலையுரு வரையத்தில் எத்தனை மாணவர்கள் விபரம் எடுக்கப்பட்டது?
இ) ஆகார வகுப்பு யாது?
ஈ) இவ்வலையுரு வரையத்தில் மீடிறன் பல்கோணி ஒன்று அமைக்க?

01. ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வங்கி ஒன்றில் காணி கொள்வனவு செய்வதற்கு கடன்பெறலாம். ஆண்டுக்கு எளிய வட்டி 12 வீதம் ஆகும். |
|---|

| தனியார் வங்கி ஒன்றில் 150,000 ரூபா கடன் பெற்றால் 3 ஆண்டுகள் முடிவில் வட்டியாக ரூபா 49500 ஐக் கொடுக்கலாம். |
|---|

மேற்குறிப்பிட்ட தகவல்களுக்கு ஏற்ப வங்கியில்

அ. 100 ரூபா கடனுக்கு ஓர் ஆண்டு வட்டி யாது?

ஆ. எக்கடன் முதலுக்கு ஓர் ஆண்டு முடிவில் வட்டியாக 2400 ரூபா கொடுக்க வேண்டும்.

இ. 150,000 ரூபா கடன்பெற்ற ஒருவர் 3 ஆண்டுகள் முடிவில் கொடுக்க வேண்டிய வட்டி யாது?

ஈ. தனியார் வங்கியில் அறவிடப்பட்ட வருட வட்டி வீதம் யாது?

02. I. A என்ற அப்பிள் வியாபாரி 3 தட்டுகளில் 3 தரங்களில் அப்பிள் விற்பனை செய்கின்றார்.

| | பெரிது | நடுத்தரம் | சிறிது |
|---|---|---|---|
| முதலாவது தட்டில் | 6 | 4x | 12 |
| இரண்டாவது தட்டில் | 2 | 6 | 4 |
| மூன்றாவது தட்டில் | 2x | 4 | 8 |

அ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

II. B என்ற வியாபாரி

| | முதலாவது தட்டில் | இரண்டாவது தட்டில் | மூன்றாவது தட்டில் |
|---|---|---|---|
| பெரிது | 8 | 7 | y |
| நடுத்தரம் | y | 4 | 6 |
| சிறிது | 5 | 8 | 5 |

ஆ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

இ. $A+B=\begin{pmatrix}14 & 20 & 17\\ 9 & 10 & 12\\ 12 & 12 & 13\end{pmatrix}$ எனின் x,y இன் பெறுமானத்தைத் தருக.

ஈ. பெரிய அப்பிள் ஒன்று 40 ரூபா. நடுத்தர அப்பிள் ஒன்று 30 ரூபாவும் சிறிய அப்பிள் ஒன்று 25 ரூபா எனில் இரு வியாபாரிகளும் பெரிய அப்பிள் முழுவதும் விற்றால் ஒவ்வொருவரும் பெறும் பணத்தொகையைத் தனித்தனியாகக் காண்க.

03. $y=x^2-4x$ இன் வரைபை வரைவதற்கு x,y ஆகியவற்றின் பெறுமானங்களின் வெற்றிடப் பகுதியை நிரப்புக.

| $x$ | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 5 | 0 | -3 | --------- | -3 | 0 | 5 |

அ. x=2 ஆகும் போது y இன் பெறுமானம் காண்க.

ஆ. வரைபுத்தாளில் x-அச்சு, y- அச்சு வழியே பத்து சிறிய சதுரங்களை ஒரு அலகாகக் கொண்டு சார்பின் வரைபை வரைக.


இ. வரைபின் சமச்சீர் சமன்பாடு யாது?

ஈ. $y=x^2-4x$ இன் 'இழிவுப் பெறுமானம் யாது?

உ. y=x-3 என்ற நேர்கோட்டை அதே வரைபுத் தாளில் வரைக.

ஊ. $y=x^2-4x$ உம் $y=x-3$ உம் ஆகியன வெட்டும் x இன் ஆள்கூறு சமன்பாடு $x^2-5x+3=0$ திரும்பதி ஆக்குமெனக் காட்டுக.

04. a. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளில் 48 பேரிடம் கைத்தொலைபேசி இருந்தது. 43 பேர் பெண்களாவர். தொலைபேசி வைத்திராத பெண்கள் எண்ணிக்கை 27 ஆகும். தொலைபேசி வைத்திராத ஆண்களின் எண்ணிக்கை 35 ஆகும். இத்தரவுகளை தரப்பட்ட வெண் உருவில் குறித்துக் காட்டுக.




அ. தொலைபேசி வைத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை யாது?

ஆ. தொலைபேசி இல்லாத ஆண்களின் பகுதியை வென் உருவில் நிழற்றிக் காட்டுக.

இ. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

b. அ. வானூர்தி ஒன்றினால் எதிரிகள் முகாமுக்கு குண்டுகள் போடப்பட்டன. குண்டுகள் எதிரி முகாமுக்குள் சரியாக விழுவதற்கான நிகழ்தகவு 4/5 ஆகும். அடுத்தடுத்த இரு குண்டுகள் போடப்பட்டன. எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான அல்லது விழாதிருப்பதற்கான நிகழ்ச்சியைக் காட்டும் மரவரிப்படம் ஒன்று தருக.

1. இரு குண்டுகளும் எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?
2. ஒரு குண்டு மட்டும் எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?
3. குறைந்தபட்சம் ஒரு குண்டேனும் எதிரி முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

05. அ. அடியின் ஆரை 2r ஆகவும் உயரம் h கொண்ட உருளை வடிவத் திண்மத்தின் கனவளவு πr,h இல் தருக.

ஆ. உருளை வடிவப் பகுதியில் ஆரை r ஆகவுள்ள அரைக்கோணப் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு πr இல் தருக.

இ. ஆரை 2r ஆகவும் உயரம் a ஆகவும் கொண்ட கூம்பின் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு π,r,a இல் தருக.


ஈ. a=4r ஆகவும் h=6r ஆகவும் இருப்பின் எஞ்சிய உருளைப் பகுதியின் கனவளவு $18\pi r^3$ எனக் காட்டுக.

உ. π=3.14,r=0.7 என்ற மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தி எஞ்சிய உருளைத் திண்மத்தின் கனவளவு யாது?

[உரு கனஅளவு $\pi r^2 h$ ⟶ கூம்பின் கனஅளவு $\frac{1}{3}\pi r^2 h$ ⟶ கோளகனஅளவு $\frac{4}{3}\pi r^3$]

## பகுதி - C

07. I. நீளமான கம்பியில் இருந்து வெட்டப்பட்ட ஒரு சென்றிமீற்றர் நீளமான சர்வசமக் கம்பித்துண்டு ஒட்டிப் பொருத்தப்பட்டு மேல்மாடிக் கிரில்கள் செய்யப்படுகின்றன.




அ. முதலாவது வடிவத்துக்கு இரண்டாவது வடிவத்தைவிட எந்தக் கம்பித்துண்டுகளைத் குறைவாக வேண்டும்.

ஆ. முதல், இரண்டாம், மூன்றாம் வடிவத்துக்குத் தேவையான கம்பித்துண்டுகள் தனித்தனியே காண்க.

இ. 12ஆவது வடிவம் அமைக்க எத்தனை கம்பித்துண்டுகள் தேவை?

ஈ. 12 வடிவமும் அமைக்க 3.6 m நீளமான நேரிய கம்பி போதுமானது என ஒரு மாணவன் கூறினார். இக்கூற்று உண்மையானதா? காரணம் தருக?


II. ஒரு பெக்கல் விருத்தி $T_n = 5 \times 2^{n-1}$ இல் $T_n = 160$ எனில் $n$ இன் பெறுமானம் யாது?

08. cm, mm அளவிடையும், நேர்விளிம்பும், கவராயம் மட்டும் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி வரைக.

I. PQ=6cm, QR=7.2cm கோணம் PQR $=120^0$ ஆகுமாறு முக்கோணி PQR ஐ அமைக்க. அடிக்கோடு QR ஐ வரைக.
II. பக்கம் QR ஐ Qவில் செங்குத்து வரைக.
III. PQ இன் செங்குத்து இருசம கூறாக்கி வரைக.
IV. இரு நேர் வரைகளும் சந்திக்கும் புள்ளி O எனக் குறித்து OQ ஐ ஆரையாகக் கொண்டு வட்டம் வரைக. ஆரையை அறிந்து எழுதுக.
V. நீங்கள் வரைந்த வட்டத்துக்கும் QR இற்கும் உள்ள தொடர்பு.

09. அ. ஒரு வட்ட நாற்பக்கல் எதிர்க்கோணச் சோடி பற்றிய தொடர்பைக் காட்டும் தேற்றத்தை எழுதுக.

ஆ. உருவில் AB ஓர் விட்டம், AC ஓர் நாண். கோணம் CAB இன் இருசம கூறாக்கி AP ஆகும். AP=DP ஆக இருக்குமாறு நாண் AC ஆனது D வரை நீட்டப்பட்டுள்ளது. பின்வருவனவற்றை நிறுவுக.





I. கோணம் CPB=180-2x

II. கோணம் APD=180-2x

III. கோணம் CPD=$90^0$

IV. $\Delta APB = \Delta DPC$

10. a. நடுப்புள்ளித் தேற்றத்தின் மறுதலைத் தேற்றத்தைக் கூறுக.




1. உருவில் AB, AC இன் நடுப்புள்ளிகள் முறையே P,Q ஆகும். BC=CD வரை நீட்டப்படுமாறு AC ஆனது E ஆரை நீட்டப்படுவது CS=ES ஆகும். உருவை வரைந்து தரவுகளைக் குறிக்க.
2. $PQ//BC$ என நிறுவுக.
3. $CD//SR$ எனின் DR=ER என நிறுவுக.
4. PQRS ஓர் இணைகரமாகும்.

11. ஒரு குறித்த நாளில் வைத்தியசாலைக்கு கண்பார்வை தொடர்பாக வந்தவர்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வயது (வருடம்) | 6 – 14 | 15 – 23 | 24 – 32 | 33 – 41 | 42 – 50 | 51 – 59 | 60 – 68 |
|---|---|---|---|---|---|---|---|
| நோயாளியின் எண்ணிக்கை (f) | 5 | 12 | 15 | 20 | 18 | 15 | 5 |

1. சிகிச்சை பெற்றவர்களில் அதிக எண்ணிக்கையானோர் எந்த வயதுக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்?
2. சிகிச்சை பெற்ற 50 வயது அல்லது 50 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை சிகிச்சைபெற வந்தவர்களின் மொத்த எண்ணிக்கையின் என்ன சதவீதம்?
3. (33-41) வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகப் பயன்படுத்தி சிகிச்சைபெற வந்தவர்களின் இடை வயதைக் காண்க. (முழு எண்ணில் தருக)


12. DB என்பது கிடைத்தளம் ஆகும். DC என்பது 20 m உயரமான கட்டடத்தில் C என்ற யன்னல் உண்டு. அதற்கு எதிரே BA என்ற மாடிக்கட்டடம் உண்டு.

I. உருவைப் பிரதி செய்து C இல் இருந்து பார்க்கும்போது மாடிக்கட்டட உச்சி A இன் ஏற்றக்கோணம் $45^0$ உம், அதன் அடி B இன் இறக்கக் கோணம் $35^0$ உம் எனக் குறிக்க.

II. DB இன் தூரம் என்ன?


III. AB இன் உயரம் என்ன?

IV. D இலிருந்து உச்சி A ஏற்றக்கோணம் (θ)யாது?



# பாகிஸ்தான் ஊடாக எரிவாயுத்திட்டம் இந்தியாவின் முயற்சி ஆபத்தானது

## எச்சரிக்கிறது அமெரிக்கா



ஈரானில் இருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு குழாய் மூலம் எரிவாயு கொண்டு வரும் திட்டம் பாதுகாப்பு தன்மையற்றது என்று தென்கிழக்கு ஆசியாவுக்கான அமெரிக்க வல்லுநர் கவ்தாட் பகத் தெரிவித்துள்ளார். சென்னை அண்ணாசாலையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தில் அந்நாட்டு தேசிய பாதுகாப்பு விவகாரத்தின் தென்கிழக்கு ஆசியாவுக்கான அமெரிக்க வல்லுநர் கவ்தாட் பகத் நேற்று கூறியதாவது, அதிபர் ஒபாமா தலைமையிலான அரசு பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்களை செய்து வருகிறது. இதன்அடிப்படையில் அமெரிக்க பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவில் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிக்க சிறப்பு புலனாய்வு பிரிவு குழு அமைக்கப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது. முன்பெல்லாம் குண்டுவெடிப்பு நிகழ்ந்தாலேயே இஸ்லாமிய அமைப்புகள் மீது குற்றச்சாட்டு கூறுவதுண்டு. ஆனால், அதிபர் ஒபாமா இப்படி அறிவிக்கவில்லை. அனைத்து இஸ்லாமியர்களையும் தீவிரவாதிகளாக சித்தரிக்கக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார். இராணுவத்தால் மட்டுமே தீவிரவாதத்தை முறியடிக்க முடியாது. பின்தங்கியுள்ளவர்களுக்கு சமூக, பொருளாதாரம் மேம்படுத்த வேண்டும். இதற்கு அமெரிக்கா முக்கியத்துவம் அளித்து வருகிறது. சவுதி அரேபியா போன்ற நாடுகளில் உள்ள இளைஞர்களை அழைத்து, இஸ்லாமிய மதம் தீவிரவாதத்திற்கு எதிரானது என எடுத்துரைக்கப்படுகிறது.

ஈரானில் கடந்த 1979ஆம் ஆண்டிலிருந்தே அணுகுண்டு சோதனை நடந்து வருவதாக கூறப்படுகிறது. இதற்குப் பல்வேறு நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. மேலும், அந்நாட்டின் மீது பல நாடுகள் பொருளாதாரத் தடையை விதித்துள்ளன. ஈரானை உலக நாடுகள் கண்காணித்துக் கொண்டு தான் இருக்கிறது. உலக நாடுகளில் எரிசக்தி, எரிவாயு உள்ளிட்டவை மிகவும் தேவையாக உள்ளது. குறிப்பாக வளரும் நாடுகளில் இதன் தேவை அதிகமாகவே இருக்கிறது.

இந்தியாவுக்கு ஈரானில் இருந்து பாகிஸ்தான் வழியாக குழாய் மூலம் எரிவாயு கொண்டு வர திட்டமிட்டுள்ளது. இது மிகவும் சவாலானது. ஏற்கனவே இந்தியா , பாகிஸ்தான் நாடுகளின் நட்புறவில் நம்பக தன்மை இல்லை. எல்லைப் பகுதிகளில் சில நேரத்தில் பதற்றம் நிலவுகிறது. இதனால், இத்திட்டம் பாதுகாப்பு தன்மையற்றது என அமெரிக்க அதிபரும் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இதை ஏற்றுக் கொண்ட இந்தியாவும் மறுபரிசீலனை செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது. எனவே, இந்தியா வேறுவழியில் ஆலோசிக்கலாம் என நினைக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# தலைவீக்க நோயால் அவதிப்படும் குழந்தை



மிக மிக அதிசயமான குழந்தை

தலைவீக்க நோயால் பாதிக்கப்பட்ட திரிபுராவைச்சேர்ந்த 16 மாதக் குழந்தை குர்கானில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. அகர்தலா அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த ரஹ்மான் என்ற செங்கற்சூளை தொழிலாளியின் குழந்தை ரூனா பேகம்.

ஹைட்ரோசெபாலஸ் (hydrocephalus) என்ற அரிய வகை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தையைக் காப்பாற்றத் தேவையான பணவசதி இல்லாமல் தவித்து வந்தனர் பெற்றோர். தற்போது அந்தக்குழந்தைக்கு மருத்துவசிகிச்சை அளிக்க குர்கானில் உள்ள தனியார் மருத்துவமனை முன்வந்தது. அதனைத்தொடர்ந்து அங்கு அனுமதிக்கப்பட்ட அந்தக் குழந்தையின் தலையில் இருந்து நீரை வெளியேற்றுவதற்கான அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிகிச்சை ஆபத்தானது இல்லை என்றும், குழந்தை விரைவில் குணமடையும் என்றும் மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இந்தியச் செய்திகள்

# பிரதமர், நிதியமைச்சரின் அனுமதியின்படியே முடிவு

## 2ஜி ஏலம் குறித்து ராசா



2ஜி ஏலத்தில் பிரதமரும், நிதியமைச்சரும் ஒப்புதல் அளித்த பின்னரே முடிவுகள் எடுக்கப்பட்டன என முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் ஆ.ராசா பேட்டியளித்துள்ளார்.

இது தொடர்பாக பலமுறை கடிதம் அனுப்பியும் ஜே.பி.சி தலைவர் விசாரணைக்கு தம்மை அழைக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், தான் குற்றமற்றவர் என நிரூபித்தும், அறிக்கையில் பெயர் இடம்பெற்றிருப்பது ஆச்சரியமளிப்பதாகவும் இது தொடர்பாக ஜே.பி.சி.க்கு 200 பக்க கடிதத்தை அனுப்ப இருப்பதாகவும் ஆ.ராசா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், பிரதமரை, அமைச்சர் ஒருவர் தவறாக வழி நடத்தினார் என்பதை எப்படி நம்ப முடியும் என ஜே.பி.சி அறிக்கை குறித்து தி.மு.க தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார். 2ஜி ஏலம் முறைகேடு தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழு அறிக்கை குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த கருணாநிதி இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

பா.ஜ.க. நிராகரிப்பு 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் பிரதமர் மற்றும் நிதிஅமைச்சரை தப்பவைக்க ஏதுவாக நாடாளுமன்ற கூட்டுக்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக பாரதிய ஜனதாக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் ரவி ஷங்கர் பிரசாத், ஜெ.பி.சி. அறிக்கையில் இடம்பெற்றிருக்கும் தகவல்கள் ஏமாற்றம் தருவதாக உள்ளது என்று தெரிவித்தார்.

# மரண தண்டனைத் தீர்ப்புகளை நிறுத்தி வைக்கக் கோரிக்கை

மரண தண்டனைக்கு எதிராக பரவலாக கருத்து வலுத்துவரும் நிலையில், இந்தியாவில் வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை தீர்ப்புகள் அனைத்தையும் நிறுத்தி வைக்கவேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக, அந்த அமைப்பு வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வெடிகுண்டு தாக்குதல் வழக்கில் தேவேந்தர் பால் சிங் புல்லருக்கு 2001 ஆகஸ்ட் மாதத்தில் விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை உச்ச நீதிமன்றம் அண்மையில் உறுதிசெய்துள்ளது. அந்த உத்தரவால் ஆம்னெஸ்டி இண்டர்நேஷனல் அதிர்ச்சி அடைந்துள்ளது.

புல்லர் வழக்கில் சர்வதேச விதிகளை பின்பற்றி வெளிப்படையாக விசாரணை நடைபெறவில்லை. அவரது கருணை மனு மீது, மிகவும் காலம் கடந்து குடியரசுத் தலைவர் முடிவெடுத்துள்ளார். அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் அணுகிய விதம் கவலையளிக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

# 29வயது வேட்பாளருக்கு 910 கோடிரூபா சொத்து



கர்நாடகா சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, 29 வயது, திருமணமாகாத பிரியகிருஷ்ணனுக்கு, 910 கோடி ரூபாய் சொத்து இருப்பதாக, வேட்பு மனுத் தாக்கலின் போது தெரிவித்துள்ளார்.

கர்நாடகா சட்டசபைக்கு, அடுத்த மாதம், 5ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல், கடந்த வியாழன் முடிந்தது. இதில், பெங்களூர் நகரில் உள்ள, கோவிந்தராஜ்நகர் தொகுதியில், காங்கிரஸ் சார்பாக போட்டியிட மனு செய்துள்ளவர், அந்தத் தொகுதியின் தற்போதைய எம்.எல்.ஏ.பிரியகிருஷ்ணன். வேட்பு மனுவுடன் அவர் தாக்கல் செய்துள்ள சொத்து விவரத்தில், தனக்கு, 910 கோடி ரூபாய் சொத்து இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். அனைத்து சொத்துகளும், தன் தந்தை மற்றும் உறவினர்களால், தானமாக வழங்கப்பட்டது என, தெரிவித்துள்ளார். இவரின் தந்தை, கிருஷ்ணப்பாவும், காங்கிரஸ் எம்.எல்.ஏ.தான் விஜயநகர் தொகுதி எம்.எல். ஏ. ஆக இருக்கிறார். "லே - அவுட" கிருஷ்ணப்பா என்றால், அந்த மாநிலத்தில் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது அந்த அளவிற்கு, ரியல் எஸ்டேட் தொழிலில் கொடிகட்டிப்பறக்கிறார். எண் கணிதத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள பிரியகிருஷ்ணன், வைத்திருக்கும், 20இற்கும் மேற்பட்ட கார்கள் அனைத்தும், "9279" என்ற எண்களையே கொண்டிருக்கும்.

# பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவலென எச்சரிக்கை

தீவிரவாதி அஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக தாக்குதல் நடத்துவதற்காக பாகிஸ்தான் தாலிபன் தீவிரவாதிகள் இந்தியாவில் ஊடுருவி இருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. பெங்களூர் குண்டு வெடிப்புச் சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரத்திற்க்கு முன்பே பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாககுதல் நடத்துவதற்கு இந்தியாவில ஊடுருவியுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது தற்போது வெளியாகியுள்ளது. பாகிஸ்தானைச் சேர்ந்த தெரிக் இ தாலிபன் இயக்கத்தின் இரகசிய பிரிவான ஜுண்டுல்லா தீவிரவாதிகள் ஐதராபாத் மற்றும் அமிர்தசரஸ் நகரங்களில் ஊடுருவியிருப்பதாக கூறியுள்ள உளவுத் துறை, மேலும், அவர்கள் மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதி அஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கசாப் தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தானைச் சேர்ந்த பல்வேறு தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் எல்லைப் பகுதியில் ஊடுருவி இருப்பதாகவும், பாகிஸ்தான் மட்டுமல்லாது ஜேர்மனியைச் சேர்ந்த தீவிரவாதிகளும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. கசாப் தூக்கிலிட்ட போதே பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகள் பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் தேர்தலில் போட்டியிட அனுமதி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பர்வேஸ் அஸ்ரப் மே மாதம நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவதற்கு அந்நாட்டு நீதிமன்றம் தற்காலிக அனுமதி வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப். கடந்த 2 தேர்தல்களில் குஜ்ஜர்கான் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

குஜ்ஜர்கான் தொகுதியில் மின்சார உற்பத்தி தொடர்பான பல்வேறு திட்டங்களை இவர் தொடங்கி வைத்தார். இந்த திட்டங்களில் ஊழல் செய்ததாக ராஜா பர்வேஸ் அஷ்ரப் மீது குற்றம் சாட்டப்பட்டது.

தற்போது நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலிலும் குஜ்ஜர்கான் தொகுதியில் போட்டியிடுவதற்காக அவர் வேட்பு மனு தாக்கல் செய்தார். அம்மனுவினை தொகுதி தேர்தல் அதிகாரி தள்ளுபடி செய்தார். ஊழல் வழக்குகளை சந்தித்து வருபவரின் வேட்பு மனுவினை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தேர்தல் அதிகாரி மறுத்துவிட்டார்.

இம்முடிவினை எதிர்த்து ராஜா பர்வேஸ் அஷ்ரப் லாகூர் ஐகோர்ட்டில் முறையீடு செய்தார். இஜூல் தலைமையிலான



3 நீதிபதிகளை கொண்ட ஐகோரட் பெஞ்ச் பர்வேசின் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது. பின், பர்வேஸ் மனுவுக்கு வரும் திங்கட்கிழமைக்குள் தேர்தல் கமிஷன் விளக்கம் அளிக்க வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

மேலும், தேர்தலுக்கான தகுதியான வேட்பாளர் பட்டியலில் இவரது பெயர் நேரடியாக சேர்க்க வேண்டும் என்றும்உத்தரவிட்டது.

# பொஸ்டன் குண்டுவெடிப்பு தீவிரவாதி துப்பாக்கிச்சூட்டில் உயிரிழப்பு



அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் நடந்த மரதன் போட்டியில் குண்டு வைத்தது தொடர்பாக தேடப்பட்டு வந்த ஒரு தீவிரவாதி பொலிஸுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் பலியானான். இன்னொரு நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

முன்னதாக இந்த விவகாரத்தில் சந்தேகத்துக்குரிய இருவரது படங்களை அமெரிக்க விசாரணை அமைப்பான எப்.பி.ஐ நேற்று முன்தினம் வெளியிட்டது. சம்பவம் நடந்த பாயில்ஸ்டன் தெருவில் உள்ள சிசிடிவிக் களில் பதிவாகியுள்ள வீடியோக்களை வைத்து இரண்டு நபர்கள் மீது எப்பிஐக்கு சந்தேகம் ஏற்பட்டது


இந்நிலையில் வாட்டர்டவுன் பகுதியில் காரில் வந்த ஒருவரை துப்பாக்கி முனையில் வழிமறித்த ஒருவன் அவரை காருடன் கடத்தினான். பின்னர் காரில் இருந்தவரை இறக்கிவிட்டுச் சென்றான். இந்த விவரம் அறிந்த பொலிஸார் அந்தக் காரை விரட்டிச் சென்ற போது, அந்த நபர் காரில் இருந்து வெடிகுண்டுகளை வெளியே வீசினான். இதையடுத்து எப்.பி.ஐ.யும் பொலிஸாரும் அந்தக் காரை சுற்றி வளைத்தனர். அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் காரில் இருந்தவன் சுட்டுக்கொல்லப்பட்டான். பின்னர் தான் அவன் பாஸ்டன் மரதன் போட்டி குண்டு வெடிப்பில் தொடர்புடையவன் என்பது தெரியவந்தது. இந்தக் குண்டுவெடிப்பில் தொடர்புடைய இன்னொரு நபரை பொலிஸார் தேடி வருகின்றனர். இந்த நபரும் அந்தக் காரில் தான் இருந்ததாகவும், பின்னர் அவன் மட்டும் தப்பிவிட்டதாகவும் தெரிகிறது.

# ஈராக் தலைநகரில் பாரிய குண்டுவெடிப்பு

இந்தத் தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் இரண்டு சிறுவர்களும் அடங்குவதாகவும் பலர் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாகவும் 'தெரிவிக்கப்படுகிறது. பக்தாத்தில் உள்ள கபே ஒன்றில் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

தற்கொலைக் குண்டுதாரியொருவர் இந்தக் குண்டை வெடிக்கச் செய்துள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரையில் எந்தவொரு அமைப்பும் உரிமை கோரவில்லை. எதிர்வரும் 20ஆம் திகதி ஈராக்கில் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் பாதிக்கப் பட்டவர்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இரண்டு புதிய கோள்களை கண்டு பிடித்துள்ளது நாஸா.



(வோஷிங்டன்)

பூமியைப் போன்று மனிதன் வாழ ஏற்ற சூழ்நிலை கொண்ட 2 புதிய கோள்களை நாஸா விண்வெளி ஆய்வு மையம் கண்டு பிடித்துள்ளது. இந்த இரண்டு கோள்களும் பார்ப்பதற்கு பூமியைப் போலவே உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரியனுக்கு அருகில் உள்ள 5 கோள்களில் பூமியைப் போலவே இருக்கும் 2 கோள்களில் அதிக வெப்பமோ, அதிக குளிரோ இல்லாமல் இருப்பதாகவும், நீர் ஆதாரம் போதிய அளவு இருப்பதாகவும் நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த இரண்டு கோள்களும் தலா 1.41 மற்றும் 1.61 சுற்றளவைக்கொண்டுள்ளன. இது பூமியை விட சுற்றளவில் பெரியதாகும். இருப்பினும் இந்த கோள்களில் நிலப்பரப்பு பாறை அமைப்பைக் கொண்டதா அல்லது நீர் அமைப்பைக் கொண்டதா என்பது குறித்து விஞ்ஞானிகள் எந்த ஒரு தகவலையும் வெளியிடவில்லை. ஆனால், இந்தக் கோள்கள் மனிதன் வாழ ஏற்ற சூழலைக் கொண்டதாக இருக்கும் என மட்டும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கெப்லர் 62 ( சூரியனைச்சுற்றி வரும் நட்சத்திரம் போன்ற கோளகள்) இற்கு அருகே சிறிய புள்ளி போன்ற ஒரு அமைப்பு காணப் படுவதை நாஸா விஞ்ஞானிகள் கடந்த ஓராண்டுக்கு முன் கண்டறிந்தனர். அந்தப்புள்ளி போன்ற அமைப்பு குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் இந்தப் புதிய 2 கோள்களின் தன்மை கண்டறியப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அந்தப்புள்ளி போன்ற நட்சத்திரம் போன்ற அமைப்பை சுற்றி 5 கோள்கள் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு கெப்லர் 22பி சுற்றி உள்ள 600 ஒலி ஆண்டு தொலைவில் உள்ள சில கோள்கள் குறித்த ஆய்வை நாஸா தொடக்கியது. அப்போது பூமியை விட 2.4 மடங்கு பெரிய கோள்கள் கண்டறியப்பட்டன.

# ஜப்பான், ரஷ்ய பகுதிகளில் சக்தி வாய்ந்த நில நடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் அடிக்கடி லேசான நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில், நேற்றுக் காலை மீண்டும் அங்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.2 ஆக பதிவானது. ஜப்பானின் வடகிழக்குப்பகுதியான நெமுரோ பகுதியிலும், அதனையொட்டியுள்ள ரஷ்யாவின் கிழக்கு - வடகிழக்குப் பகுதியிலும் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

பசுபிக் கடலில் 10 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டு தாக்கியது. இது தலைநகர் டோக்கியோவில் இருந்து 1500 கி.மீ. தொலைவில் உள்ளது. இதனால் கடல் அலைகள் ஆக்ரோஷமாக எழுந்தன. ஆனால், சேத விபரங்கள் மற்றும் சுனாமி எச்சரிக்கை பற்றிய தகவல் வெளியாகவில்லை.

நிலநடுக்கம் நள்ளிரவுக்குப் பின் அதிகாலையில் ஏற்பட்டது. அப்போது மக்கள் வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்தனர். வீடுகள் குலுங்கியதால் மக்கள் அலறியடித்தபடி பீதியில் விட்டைவிட்டு வெளியே ஓடி வந்தனர்.

உலகச் செய்திகள்

## நிதி ஒதுக்கீட்டில் முறைகேடு

# சர்வதேச நாணய நிதிய தலைவர் மீது விசாரணை



பிரான்ஸ் நாட்டுப் பிரஜையான கிறிஸ்டின் லெகர்டே, சட்டத்தரணியாக தனது வாழ்க்கையைத் தொடங்கிப் பின் பிரான்ஸ் நாட்டு அரசியலிலும் தன்னை இணைத்துக்கொண்டார். கடந்த 2011ஆம் ஆண்டு,ஜூலை மாதம், இவர் சர்வதேச நிதி மையத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்நிறுவனத்தை வழிநடத்தும் முதல் பெண்மணி என்ற பெருமையும் இவரைச் சேரும். கடந்த ஆகஸ்ட் மாதத்தில், இவர் பிரான்ஸ் நாட்டுத் தொழிலதிபரான பெர்னாட் டாபய்க்கு, வியாபாரப் பிரச்சினைகளைச் சரி செய்வதற்காக அளித்த 520 கோடி டாலர் குறித்து, குற்றச்சாட்டு எழுந்தது.

டாபய், பிரான்ஸ் நாட்டின் பிரபல கால்பந்து கழகத்தின் தலைவராக இருந்தபோது, போட்டிகளின் முடிவை நிர்ணயித்த பிரச்சினையில் சிறைத்தண்டனை அனுபவித்தவர். இவர், லெகர்டெயின் அரசியல் தலைவரான, பிரான்ஸ் நாட்டின் அதிபதி நிக்கோலஸ் சர்க்கோசி, 2007 மற்றும் 2012 தேர்தல்களில் பதவியைப் பெறுவதில் ஆதரவாகச் செயல்பட்டார்.


இதன்பலனாக, அவருக்கு இந்த நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது என்பதுதான் லெகர்டெயின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு ஆகும். சென்ற மாதம், பாரிசில் உள்ள லெகர்டெயின் வீடு , புலனாய்வுத்துறை அதிகாரிகளால் சோதனை இடப்பட்டது.

தன்மீது எந்தத் தவறும் இல்லை என்பதனை அவர் நிரூபிப்பாரென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.



திபெத்தைச் சேர்ந்த புத்தமதத் தலைவர் தலாய்லாமா, அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். வடக்கு அயர்லாந்தின் லண்டன்டெர்ரியில் நடைபெற்ற அமைதிக் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

# அமெரிக்கா தலையிடக்கூடாது வெனிசூலா ஜனாதிபதி எச்சரிக்கை



வெனிசுலா அதிபராக நிக்கோலஸ் மடுரோ வெற்றி பெற்றது செல்லாது எனவும், மறு வாக்கு எண்ணிக்கையை நடத்தவேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்த கருத்திற்கு உள்நாட்டுப்பிரச்சினையில் அதிபர் நிக்கோலஸ் மடுரோ அமெரிக்கா வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி, வெனிசுலாவில் மறு வாக்கு எண்ணிக்கை நடத்தவேண்டும். அங்கு பெரிய அளவில் முறைகேடுகள் நடைபெற்றது தெரிந்தால், அங்குள்ள அர சாங்கத்தின் நம்பகத்தன்மை குறித்து நாங்கள் தீவிர கேள்விகளை எழுப்புவோம். இந்த பிரச்சினை இன்னும் முடியவில்லை என்று கூறினார். இந்தக் கருத்துக்கு நிக்கோலஸ் மடுரோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், வெனிசுலாவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீடு, குறிப்பாக தேர்தல் சமையத்தின் போது அவர்களின் தலையீடு இழிவானதாகவும், கொடூரமானதாகவும் இருக்கிறது என்றார். பூஸ்வாக்கள், நிலப்பிரபுகளுடன் இணைந்து கொண்டு அமெரிக்காவின் நடவடிக்கைகள் மிகவும் கேவலமானதாக இருக்கிறது. ஜோன் கெர்ரி வெனிசுலாவை கவனிப்பதை விட்டுவிட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்காவின் அங்கீகாரம் தனக்கு தேவையில்லை என்றும், அமெரிக்க தூதரகத்தின் நிதியுதவியுடன், வலதுசாரிக் கட்சியினர் திடீர் சதிப்புரட்சி ஒன்றுக்கு திட்டமிடுவதாகவும் மடுரோ குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பக் கல்வி

## திருநகரில் கணனிப் பயிற்சி நிலையம் திறப்பு



எமது பிரதேச மாணவர்கள் தகவல் தொழில்நுட்பக்கல் வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் எம்மால் ஏற்படுத்தித் தரப்படுமென ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன்(கமல்) தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.திருநகரில் மாநகர சபையின் அனுசரணையில் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் நடாத்தப்படவுள்ள இலவச கணனிக் கல்வி நிலைய திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்றைய நவீன கல்வி வளர்ச்சிக்கு ஏற்ப எமது மாணவர்களின் கல்வித்தரத்தினை உயர்நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டியுள்ளது. யாழ் மாநகர சபையின் அனுசரணையில் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் வழங்கப்படும் இலவச கணனிக் கல்வி வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் உரிய முறையில் வகுப்புக்களில் கலந்து கொண்டு பயனடைய வேண்டும்.

திருநகர்ப்பிரதேசத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியால் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இப்பிரதேச மாணவர்களின் கல்வித்தரத்தினை முன்னேற்றுவதற்கான செயற்பாடுகளும் எம்மால் முன்னெடுக்கப் பட்டுள்ளன. இதேபோன்று ஏனைய பிரதேசங்களிலும் மாணவர்களின் கல்வித்தரத்தினை முன்னேற்றுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். கஷ்ரப் பிரதேசம் என்ற கருத்தை மாற்றும் வகையில் எமது முன்னேற்றத்திற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையின் ஏனைய பிரதேசங்கள் தகவல் தொழில்நுட்பத்துறையில் மேம்பட்ட நிலையில் காணப்படுகின்ற போதும் எமது பிரதேசங்கள் தகவல் தொழில்நுட்பத்துறையில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. கடந்த கால யுத்தமே இத்தகைய துர்ப்பாக்கிய நிலைக்கு எமது பிரதேசத்தை இட்டுச் சென்றது. எனவே எமது பிரதேச மாணவர்கள் தகவல் தொழில் நுட்ப கல்வியை பெறுவதற்கான வாய்ப்புக்கள் எம்மால் ஏற்படுத்தித் தரப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரையின் கீழ் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட வீதிகள், தூர்ந்துபோன நிலையில் காணப்படும் வடிகான்கள் என்பன புனரமைக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தொடர்ந்து இலவச கணனிக் கல்வி நிலையத்தை யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர் விஜயகாந், வடமாகாண கல்விக் குழுவைச் சேர்ந்த செல்வவடிவேல், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை செயலாளர் பாலகிருஸ்ணன், பங்குத் தந்தை சகாய நாயகம் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பொலிஸாரின் வலையில் குற்றவாளிகள் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன் துறை பொலிஸ் பிரிவுகளில் பல் வேறு குற்றச் செயல்களின் பிரகாரமும் நீதிமன்றப் பிடியாணையின் பிரகாரமும் 123 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் கடந்த வாரம் பாரப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சகிர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் பிரிவில் அடித்துக்காயப்படுத்திய குற்றத்திற்காக 26 பேரும், சந்தேகத்தின் பேரில் மூவரும், வீதி விபத்துச் சம்பந்தமாக நால்வரும், குடித் துவிட்டு கலவரம் விளைவித்த 11 பேரும், பாதுகாப்புக் கருதி ஆறு பேரும் அடங்கலாக 82 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேபோன்று காங்கேசன் துறை பொலிஸ் பிரிவில் மொத்தமாக 41 பேர் அடங்கலாக இந்த 123 பேரும், கடந்த வாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த வாரம் நகை, பொருள் உட்பட 3 திருட்டுச் சம்பவங்களும், அடித்துக் காயப்படுத்திய ஒரு சம்பவமும், காசோலை மோசடிச் சம்பவம் ஒன்றும், இரண்டு பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் பாரிய குற்றங் களாகப் பதிவாகியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# தகவல் தெரிந்தால் கைது செய்திருப்போம்

## கைவிரிக்கின்றனர் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

உதயன் பத்திரிகை நிறுவன அச்சகத்தின் மீது தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் குறித்த தகவல் பொலிஸாருக்குத் தெரியாது. அவ்வாறு தெரிந்திருப்பின் அவர்களைக் கைது செய்ய முடிந்திருக்கும் என்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறு ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியிருக்க பொலிஸார் அவர்களைக் கைது செய்ய முடியவில்லை என்று பொலிஸார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கு அவர் கவலை தெரிவித்ததுடன், யாழ். மாவட்டம் ஒரு பெரிய பிரதேசம். எல்லா இடங்களிலும் நடைபெறும் குற்றச்செயல்களையும் கவனிக்கும் நிலையில் பொலிஸார் இருக்கின்றனர். ஒரு பகுதியை 24 மணி நேரமும் கண்காணிக்க முடியாமல் உள்ளது. பொலிஸ் ரோந்தின் போது குறிப்பிட்ட பகுதியைப் பொலிஸார் கடந்த போது அந்தப் பகுதியில் நடைபெறும் குற்றச் செயல்களின் சந்தேக நபர்களைக் கைது செய்வது என்பது கடினம். அந்தப் பகுதியில் இருந்து தகவல் கிடைக்க வேண்டும். ஆதாரம் கிடைக்க வேண்டும். இந்தநிலைகளினூடாகவே சந்தேக நபர்களைக் கைது செய்ய முடியும். ஏதேச்சையாக சில குற்றச் செயல்களின் போது பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சந்தேக நபர்களைக் கைது செய்திருக்கின்ற சம்பவங்களும் நடைபெற்றிருப்பதாகவும் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (பா)

# ஹக்கீம் வியட்நாம் பயணம்

(கொழும்பு)

வியட்நாம் நீதி அமைச்சர் ஹா ஹுங் குங்கின் அழைப்பை ஏற்று அமைச்சர் ஹக்கீம் வியட்நாம் செல்கின்றார். ஏப்ரல் 24ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கும் அமைச்சர் ஹக்கீம் பல முக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இலங்கை - வியட்நாம் ஆகிய நாடுகளின் நீதி அமைச்சர்கள் கடல்சார் சட்டம், நீதித்துறை சீர்திருத்தம், நடுத்தீர்ப்பு மையம், ஆசிய, ஆபிரிக்க சட்ட ஆலோசனை மன்றம் என்பவற்றை உள்ளடக்கியதாக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடவுள்ளனர்.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான நீதி, சட்டத்துறை மேம்பாடு தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

வியட்நாம் பிரதமர் நகுயென் டான் டுங் மற்றும் அமைச்சர் ஹக்கீம் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பொன்றுக்கும் ஏற்பாடாகியுள்ளது.

மறைந்த வியட்நாம் ஜனாதிபதி ஹோஷிமின் உடைய நினைவாலயத்தையும் அமைச்சர் சென்று பார்வையிடவுள்ளார்.

அமைச்சர் ஹக்கீமுடன் நீதி அமைச்சின் மேலதிகச் செயலாளர் குமார் ஏக்கநாயக்க மற்றும் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி எம்.எச்.எம்.சல்மான் ஆகியோர் விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனிஷ்ட...

வருவதாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் கலாநிதி திஸ்ஸ ஹேவாவிதாரன தெரிவித்தார். அடுத்த வாரம் முதல் புதிய பாடப் புத்தகங்கள் எழுதும் பணி ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும், அதற்காக தேசிய கல்வி நிறுவகம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட பலர் பங்களிப்புச் செய்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

அவ்வாறே பாடப்புத்தகங்களை எழுதியதன் பின்னர் அது குழுவொன்றிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அது தொடர்பான குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளதாகவும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் கூறினார். புதிய பாடத்திட்டத்திற்கேற்ப தயாரிக்கப்படும் புதிய பாடநூலில் 2014 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும், அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் வலியுறுத்தினார்.

## 'உதயன்'....

ஒன்றும் வெற்று ரவைக் கோவைகளும், பிளாஸ்ரிக் கான் பொலித்தீன் பை என்பனவும் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முடிந்ததன் பிற்பாடே மேலதிக தகவல்கள் எதனையும் வெளியிட முடியும் என்றும் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் கடந்த 13 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் கல்வியங்காடு ஆறுமுகம் வீதியைச் சேர்ந்த தேவநாயகம் பிரேமானந்தன் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருப்பதாகவும் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்தத் தாக்குதல் மூலம் உதயன் நிறுவனத்திற்கு இரண்டு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (பா)

## இந்திய...

ஒப்படைத்தனர்.

அவர்கள் 26 பேரையும் நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்ப்படுத்திய இரண்டு தடவைகள் விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த 26 இந்திய மீனவர்களும் நேற்று மீண்டும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த யாழ்.ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மகேந்திரராசா குறித்த மீனவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் யாழ் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் பாலசுப்பிரமணியம் ரமேஸ் கண்ணா தெரிவித்துள்ளார். (02)

## மின்சாரம்...


நேற்றுக் காலையும் வேலை செய்யும் நோக்குடன் மின் இணைப்புப் பொருத்தும் போது மின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துஉள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று மாலை மரண விசாரணைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (21, இ)

## இரகசியங்களை...

சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் ரைம் ஒப்த இந்தியா என்ற ஊடகத்தில் வடக்கில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவம் உள்ள தாக வெளியான செய்தி தொடர்பில் தன்னிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும் நாட்டின் பாதுகாப்பு மற்றும் இராணுவ இரகசியங்களை வெளியிட்டுள்ளமை தொடர்பில் தன்னிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (02)

# வறுமையை விரட்டுவதே எமது ஒரே இலக்கு



தமிழ் மக்களின் துன்ப துயரங்களை துடைத்து எமது மக்களின் வறுமையினை ஒழிக்கவேண்டும் என்ற நோக்குடனேயே அன்று தொட்டு இன்று வரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செயற்பட்டு வருகின்றார் என ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

தொழிற்பயிற்சி அதிகார சபையில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான தேசிய தொழிற்தகமைச் சான்றிதழ் நேற்றையதினம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை அதிகாரசபை இணைப்பாளர் அகிலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பினை வழங்கக் கூடிய கற்கைநெறிகளை பயிற்றுவிக்கும் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு ஒரு கற்கை நெறிக்கான அங்கீகாரம் மட்டுமே காணப்பட்டபோதும் தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக 21 கற்கை நெறிகளுக்கு அங்கீகாரத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான கற்கை நெறிகளூடாக பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புக்களை இளைஞர், யுவதிகள் பெற்றுக்கொள்ள முடியும் அந்த வகையில் அரசாங்கத்தினுடைய இவ்வாறான இலவச கற்கைநெறிகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதனூடாக சிறந்த எதிர்காலத்தினை பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். முதற்தடவையாக யாழ். மாவட்டத்தில் 68 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மருத்துவர்களுக்கு தமிழ்மொழிப் பயிற்சி

(கொழும்பு)

இந்த வருட முடிவில் முதல் கட்டமாக ஆயிரம் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் நோயாளர்களிடம் தமிழில் உரையாடக்கூடிய சந்தர்ப்பம் ஏறபடுத்திக் கொடுக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான முதல்கட்ட பணி கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமானதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 30 வைத்தியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக 65 வைத்தியர்களுக்கு தமிழ்மொழி பயிற்சி அளிக்கும் திட்டம் ஆரம்பமாகவுள்ளது. நோயாளர்கள் சொல்வதை செவிமடுப்பது, நோயாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிதல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயற்படுத்தவென 17 வைத்தியர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# டிமிக்கிவிட்ட இரட்டை ஆபிரிக்கர்கள்; தெற்கில் பொலிஸார் வலைவீச்சு

கொலை செய்யப்பட்ட கொங்கோ ஜனாதிபதியின் பிள்ளைகள் தாங்கள் எனவும் தாம் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாகவும் கூறி வர்த்தகர் ஒருவரையும் அவரது மனைவியையும் ஏமாற்றி அவர்களிடமிருந்து பல மில்லியன் ரூபா வரையில் ஏமாற்ற முயன்ற ஆபிரிக்கர்கள் இருவரை தாம் தேடிவருவதாகக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கொழும்பு மேலதிக நீதவானிடம் கூறினர்.

இலங்கை வர்த்தகர், குறிப்பிட்ட ஆபிரிக்க பிரஜையை கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சந்தித்துள்ளார். இவர் தான் கொலை செய்யப்பட்ட ஆபிரிக்க ஜனாதிபதியின் மகன் எனவும் தமது தந்தை கொலைசெய்யப்பட்டபின் தாம் பிரான்ஸில் குடியேறியுள்ளதாகவும் இந்த வர்த்தகரிடம் கூறினார்.

இலங்கையில் ஒரு கூட்டு முயற்சியைத் தொடங்க பங்காளிகளைத் தேடிவருவதாக இவர் வர்த்தக தம்பதியிடம் கூறியுள்ளார். இந்நிலையில் இந்த ஆபிரிக்கரைத் தனது உலோக வர்த்தகத்தில் பங்காளியாகச் சேர்க்க கணவன் சம்மதித்துள்ளார். இதன்பின் இந்த ஆபிரிக்கர் கொழும்பிலுள்ள வர்த்தகரின் அலுவலகத்துக்கு பல தடவை வந்துள்ளார். சில காலம் செல்ல இவர் இன்னொரு ஆபிரிக்கரை அழைக்க வந்து தனது தம்பியென அறிமுகம் செய்துள்ளார்.

இவரும் இணைந்து கொழும்பில் ஒரு பெரிய தொழிலை தொடங்கப் போவதாகவும் அவர் கூறினார்.

ஒருநாள் இந்த இருவரும் சில இரசாயன பொருட்களையும், சாயம் மூட்டப்பட்ட பேப்பர் கட்டுகளையும் கொண்டுவந்தனர். இந்தக் கட்டிலிருந்த 3 தாள்களை எடுத்து அவர்கள் கொண்டுவந்த இராசாயன திரவத்தை அதன் மீது தடவ அவை 100 அமெரிக்க டொலர் தாள்களாக மாறின. பின்னர் இந்த இராசாயன திரவம் முடிந்துவிட்டதாகவும் அதை கொண்டுவர 1.2 மில்லியன் ரூபா தேவையெனவும் கூறி 1.2 மில்லியன் ரூபா தரும்படி கேட்டனர். சந்தேகம் அடைந்த வர்த்தகர் இதை குற்றப்புலனாய்வு பொலிஸாரிடம் முறையிட்ட. அதன்பின் இவர்கள் தலைமறைவாகி விட்டனர் என்று தெரிவித்த குற் றப்புலனாய்வு பிரிவினர் இவ்விருவர் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

# சுற்றுலாப் பயணிகள் மீது கண்காணிப்பு அதிகரிப்பு

## கிளம்புகிறது எதிர்ப்பு

தங்காலை விடுதி ஒன்றில் பிரிட்டிஷ் பிரஜை ஒருவர் 2011 ஆம் ஆண்டு நத்தார் பிறப்பு தினத்தன்று இரவு சுட்டுக்கொல்லப்பட்டார். இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிப்பதற்கு கொண்டுவந்துள்ள புதிய விதிகள் தொடர்பில் ஹொட்டல் தொழிற்துறை சார்ந்தவர்கள் பல தரப்பட்டக் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் ஒருவாரத்துக்கு அதிககாலம் தங்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் விசா மற்றும் கடவுச்சீட்டுத் தகவல்களை ஹொட்டல்களும் விருந்தினர் ஓய்வு விடுதிகளும் அரசாங்கத்திடம் வழங்கவேண்டும் என்று புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாப்பதற்கும் விடுமுறையை கழிபபவர்கள் என்ற போர்வையில் இருப்போரால் புரியப்படும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுளளதாக அரசாங்கம் கூறுகிறது.


இப்படியான மேலதிக கண்காணிப்பு நடவடிக்கைகள் அவசியம் என்று இலங்கையில் ஹோட்டல்களை நடத்துவோரில் சிலர் கூறுகின்றனர். ஆனால் இப்படியான கட்டுப்பாடுகளால் வெளிநாட்டுப் பயணிகள் இலங்கைக்கு வரத்தயங்குவார்கள் என்று ஹொட்டல் தொழிற்துறை சார்ந்த மேலும் பலர் பி.பி.சி.யிடம் தெரிவித்தனர். இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் விசாக் கட்டணம் அறவிடும நடைமுறையை 2011 ஆம் ஆண்டில் அரசாங்கம் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. நோக்கி பயணித்த 105 இலங்கையர்கள் கைது

சட்டவிரோத படகின் மூலம் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்கு செல்லமுயன்ற 61 பேரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர. மட்டக்களப்பு, கதிரவெளி கிழக்குக் கடற்பரப்பில் வைத்து மேற்படி 61 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுஷன்-2 என்று பெயரிடப்பட்ட படகிலேயே இவர்கள் அவுஸ்ரேலியா நோக்கிப் புறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்வர்களில் 60 தமிழர்களும் சிங்களவர் ஒருவரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக் கப்படுகின்றது. இவர்களில், 43 ஆண்களும் 8 பெண்களும் 10 சிறு வர்களும் அடங்குகின்றனர். அதேவேளை நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் மொத்தம் 105 இலங்கையர்கள் கடலில் வைத்துக் கைதாகியுள்ளனர்.

# இந்தியன் பிரிமியர் லீக் ஐதராபாத் அணி வெற்றி



ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் 25 ஆவது லீக் நேற்று இரவு 8.00 மணிக்கு ஐதராபாதில் தொடங்கியது. இதில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணியின் கபடன் துடுப்பாட தேர்வுசெய்தார். அதன்படி மந்தீப் சிங் - கில்கிறிஸ்ட் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். மந்தீப் சிங் 10 ஓட்டம், கில்கிறிஸ்ட் 26 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். பஞ்சாப் அணி 9 விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டம் எடுத்தது. சன்ரைசர்ஸ் அணி சார்பில் இசாந்த் சர்மா, மிஸ்ரா, கரண் சர்மா ஆகியோரதலா இரண்டு விக்கெட்டுகளும், ஸ்டெய்ன ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

124 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

தொடக்க ஆட்க்காரராக களம் இறங்கிய கியூ டி காக் ஓட்டம் ஏதும் எடுக்காமல் பிரவீண்குமார் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். ரெட்டி 19 ஓட்டங்களில் கோனி பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்த வந்த வியாரி சிறப்பாக விளையாடி 46 ஓட்டம் எடுத்துத் தந்தார். அதன்பின் வந்த வீரர்கள் சிறப்பாக விளையாட ஐதராபாத் அணி 18.5 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 127 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பஞ்சாப் அணி சார்பில் கோனி இரண்டு விக்கெட் வீழ்த்தினார். சன்ரைசர்ஸ் அணி 7 போட்டிக ளில் விளையாடி 5 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. பஞ்சாப் அணி 5 போட்டிகளில் விளையாடி 2 இல் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.


## உடனடி வேலைவாய்ப்பு

தினமுரசு காரியாலய இயந்திரப் பகுதியில் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
SORD, KORD அச்சு இயந்திரங்களை இயக்கக் கூடிய அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழக விருப்பமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்
தினமுரசு


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.